விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-300)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 02 வெள்ளிக்கிழமை (18.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 274

## திலீபனுக்கு அஞ்சலி தவிசாளர் மறுப்பு

(வவுனியா)

தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு வவுனியா நகர சபை உறுப்பினர் முற்பட்ட நிலையில் சட்டத்தினை காரணம் காட்டி தவிசாளர் அதனை மறுத்திருந்தார்.

வவுனியா நகர 23

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களிடம் இணையவழி பாலியல் பகிடிவதை

### விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக புதுமுக மாணவர்கள் மீது இணையவழியில் பாலியல் ரீதியில் மிக மோசமான பகிடிவதை நடைபெறுவதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட் 23

### இராணுவ பின்னணியைக் கொண்டவரிடம்

# நிறைவேற்று அதிகாரம் சென்றால் பாரிய ஆபத்து

### ராஜித சேனாரத்ன எச்சரிக்கை

(கொழும்பு)

**20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகூடிய அதிகாரம், இராணுவ பின்னணியைக் கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போன்ற ஒருவர் கையில் கிடைக்கப் பெற்றால் அது பாரிய நெருக்கடிகளை தோற்றுவிக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை 20ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கத்தை ஏற்படுத்தும் செயற்றிட்டமொன்று இடம்பெற்றது.

இதன்போது கருத்துரைக்கும்போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை பொறுத்தமட்டில் அவர் பல போராட் 23



## மோட்டார் குண்டு அராலியில் கண்டுபிடிப்பு

(அராலி)

அராலி கிழக்குப் பகுதியிலுள்ள வெற்றுக் காணியொன்றை சுத்தம் செய்யும் போது 81ரக மோட்டார் குண்டு ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. நீதிமன்றத் 23

## கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் ஐங்கரன் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரதேசத்திற்குட்பட்ட காணி விவகாரம் தொடர்பில் நேரில் 23

## பாம்புக்கடிக்கு இலக்கான 7 வயது சிறுவன் மரணம்

### வட்டுக்கோட்டையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பகுதியில் பாம்பு தீண்டிய சிறுவன் ஒருவன் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளான்.

இதில் வட்டுக் 23

ஜோதிடக் கலாமணி
## சிவல்புரி சிங்காரம்
எழுதும்
### புரட்டாதி மாத இராசி பலன்கள்

## நல்லூர் பிரதேச சபை செயலாளர் மீது தாக்குதல்

### தாக்குதல் நடத்தியவர் கைதாகி பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குள் உட்புகுந்து சபையின் செயலாளர் எஸ்.சுதர்சன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிய 23

### கிளிநொச்சி முகமாலையில்

## சீருடைகள், எலும்புகள், பற்றிகள் மீட்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி முகமாலை பகுதியில் சீருடைகள், கால் பாகத்தின் எலும்புத் துண்டுகள், பற்றிகள் என்பன மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணி 23



## கரவெட்டி பிரதேச சபையின் நேற்றைய மாதாந்த அமர்வில்

### பெரும் அமளி துமளி

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றபோது சபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

பிரதேச சபையின் தவிசாளர் த.ஐங்கரன் தலைமையில் முற்பகல் கூட்டம் ஆரம்பமானது.

23



மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் – புதுக்குடியிருப்பு

சக்கர கலச விளக்கு பூசையுடன் கூடிய 10 ஆவது வருடாந்த யாகம்

காலம் :- 20.09.2020 நேரம் : காலை 10.00 மணி

இடம் : ஆதி பராசக்தி வழிபாட்டு மன்றம், 4 ஆம் வட்டாரம் கோம்பாவில், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

அனைவரும் வருக!

அன்னதானத்துடன் அன்னை அருள் பெறுக!

மேலதிக ஆலய தொடர்புகளுக்கு:-

077 4744810, 077 1699689

(C-1034)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

## தவறிவிட்டது

காரைநகரை வசிப்பிடமாகக் கொண்ட **S. நந்தபாலன்** என்பவருடைய அடையாள அட்டை, மருத்துவச் சான்றிதழ் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் அடங்கிய கோவை யாழ். நகரிற்கும் வட்டுக் கோட்டைக்கும் இடையில் கடந்த மாதம் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (4001)

**தொடர்பு :- 077 239 5810**

## வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர், கச்சேரி, அரியாலை, யாழ். நகரை அண்மித்த பிரதேசங்களில் வீடு வாடகைக்குத் தேவை. (4005)

**தொடர்பு :- 075 090 6486**

குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை, யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- எளிய முறை உடற்பயிற்சிகள்
- எளிய முறை தியானப்பயிற்சிகள்
- காயகல்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம் :19.09.2020 சனிக்கிழமை தொடக்கம் 25.09.2020 வெள்ளிக்கிழமை வரை

நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை

பயிற்சிகளை வழங்குபவர்கள்: துணைப்பேராசிரியர் த. நந்தகுமரன்

**யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்**

**இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.இல: 021 222 2772**

(C-347)

## கிளி / உருத்திரபுரம் மகா வித்தியாலயம்

### பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

மேற்படி பாடசாலையின் பழைய மாணவர்களுக் கான பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நடை பெறவுள்ளதால் சகல பழைய மாணவர்களையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

**காலம் :- 27.09.2020 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் :- பி.ப 2.00 மணி**

**இடம் :- பாடசாலை மண்டபம்**

**திருமதி கே. சிவகரன்**

**அதிபர் - கிளி / உருத்திரபுரம் மகா வித்தியாலயம்**

(C-346)

## ஓராண்டு நிறைவில்

### உளம் உருகி நினைக்கின்றோம்...



அமரர்

**சின்னத்தம்பி செல்லம்மா**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12.02.1932 | 29.09.2019 |

வாழ்வு நிலையற்றதுதான்
ஆனாலும் நீங்கள் எங்களுடன்
வாழ்ந்திருக்க வேண்டுமென
ஆசை கொண்டோம்.
எம் விழிகளுக்குள் மூழ்ய
உம் நினைவுகள்
கண்ணீராய் துளிகளாய்...

உம் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

இன்று ( 18.09.2020 ) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



அழைக்கத் தவறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-348)

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்**

## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

### பெறுகைக்கான அழைப்பு

சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு காவல் இல்லமும் - அச்சுவேலி மற்றும் அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் - கைதடி ஆகிய இல்லங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகமும் - 2020 / 2021

1. வடமாகாண நன்னடத்தை, பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் பெறுகை குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த உலர் உணவுப் பொருட்கள் மற்றும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைக் கோருகின்றார்.

| நிறுவனங்கள் | பெறுகை இல. | உத்தரவாதமுறிப் பணம் |
|---|---|---|
| சான்று பெற்ற பாடசாலையும் தடுப்புக் காவல் இல்லமும் - அச்சுவேலி | NP/30/02/02/Food/CS/2020 | 100,000.00 |
| அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் - கைதடி | NP/30/02/02/Food/SRH/2020 | 80,000.00 |

2. விலைக் கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கான வியாபார பதிவுடைய ஒரு நபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. பொருத்தமான உத்தரவாதமுறி பெறப்பட்டு பெறுகையுடன் இணைக்கப்படல் வேண்டும். உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும். உத்தரவாத முறிப் பணம் மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.
4. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர், இத்திணைக்களத்தில் கிடைக்கும் **"Application for Bid Documents"** என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா.**2000/=** இனை காசாகச் செலுத்தி தமிழ் மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் **18.09.2020** தொடக்கம் **02.10.2020** வரையான காலப்பகுதியில் காலை 09.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் **29.09.2020** காலை 11.00 மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக் கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.
5. விலைக் கேள்விகள் **05.10.2020** ஆந் திகதி காலை 11.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் ஆணையாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் 05.10.2020 திகதி காலை 11.30 மணிக்கு விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
6. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல. 021 222 8321)
7. கிடைக்கப்பெற்ற விலைக் கேள்விகள் நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது. அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**இ. குருபரன்**

தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,
நன்னடத்தை, பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா,
மீனாட்சி அம்மன் வீதி,
பண்ணை, யாழ்ப்பாணம்.

(C-343)

# உதயமானது உலகத் தமிழ் பாராளுமன்றம்

(கொழும்பு)

**உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு 'உலகத் தமிழ் பாராளுமன்றம்' என்ற ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளது.இதில் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிஷியஸ், கனடா, பப்புவா நியூ கினி, கயானா போன்ற எட்டு நாடுகளில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் செனட்டர்கள் என 147 பேரும் மத்திய அமைச்சர்களாக 14 பேரும் தற்போது உள்ளனர்.**

உலகில் அனைத்து நாடுகளிலும் தமிழ் இளைஞர்கள் அரசியலில் ஈடுபடுதல், அரசியல் மூலம் தமிழர்கள் அரசாங்கத்தின் சலுகைகளைப் பெறுதல், பல்வேறு நாடுகளில் உள்ள பொதுப் பிரச்சினைகளை அந்தந்த நாட்டு பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து தீர்வு காணுதல் போன்றன இவ்வமைப்பின் நோக்கமாகும்.

அரசியலில் பல்வேறு கொள்கைகள் இருந்தாலும் தமிழராய், பொதுப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் பல்வேறு நாடுகளுக்கு நேரடியாக பயணம் செய்து அரசாங்கங்களுடைய அனுசரணையோடு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக தீர்வு காணவும் பல்வேறு நாடுகளுடன் இறையாண்மையுடன் நல்லுறவை ஏற்படுத்தவும் இந்த உலகத் தமிழ் பாராளுமன்றம் செயற்படவுள்ளது.

இவ்வமைப்பிற்கு பன்னாட்டு ஒருங்கிணைப்பாளராக செல்வகுமார், இலங்கை இணைப்பாளராக சுப்பிரமணிய தியாகு, சிங்கப்பூருக்கு ராஜேந்திர பூபதி, மலேசியாவிற்கு தீனதயாளன், மொரிஷியஸிற்கு நித்யானந்தா, கனடாவிற்கு ஆலன் டீன் மணியம், கயானா மற்றும் பப்புவா நியூ கினிக்கு ஜனகன் ஆகியோர் ஒருங்கிணைப்பாளராக செயற்படவுள்ளனர்.

உலகில் 13 கோடியே 60 இலட்சம் தமிழர்கள் உள்ளனர். உலக மக்கள் தொகையில் இரண்டு வீதமுள்ள தமிழர்கள் அனைத்து நாடுகளிலும் அரசின் பிரதிநிதி பெற்று மக்கள் நலனில் அக்கறை கொண்ட சமுதாயமாக மாற்ற வேண்டும் என உலகத் தமிழ் பாராளுமன்ற பன்னாட்டு ஒருங்கிணைப்பாளரும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவருமான செல்வகுமார் தெரிவித்துள்ளார்.

அத்துடன் விரைவில் எட்டு நாடுகளில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இணையவழியில் பொது விவாதம் ஒன்றை நடத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-7)

WTP
உலகத் தமிழ் பாராளுமன்றம்
WORLD TAMIL PARLIAMENT

# 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மேலும் ஆய்விற்குட்படுத்தப்படும்

## அமைச்சர் கெஹலிய




(கொழும்பு)

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை மேலும் ஆய்வு செய்ய எதிர்பார்ப்பதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

"13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை மேலும் ஆய்வு செய்யவே நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதற்கான தேவைகள் மற்றும் அதனை எவ்வாறு முன்னோக்கி கொண்டுசெல்வது அதனை முன்னோக்கி கொண்டு செல்ல விரும்பவில்லையாயின் அதற்கான காரணங்களை ஆராய வேண்டும்.

அதுபோலவே 13 ஆவது திருத்தம் தோற்றம் பெறுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

இவ்வாறான விடயங்களை ஆராய்ந்து அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

பகிரங்க விவாதத்தில் ஏற்படும் சந்தேகங்கள் ஜனநாயகத்தின் பண்பாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

# வெளிநாடுகளில் பட்டம் பெற்றவர்களை அரச சேவையில் இணைக்க தீர்மானம்

(கொழும்பு)

சர்வதேச நாடுகளில் பட்டம் பெற்ற மாணவர்களை அரச சேவையில் உள்ளீர்ப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த பட்டதாரிகளிடம் இருந்து 4 ஆயிரத்து 100 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் நாயகம் எப்.ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார். அவர்களை அரச சேவையில் உள்ளீர்க்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.அதனடிப்படையில் எதிர்காலத்தில் நேர்முகத் தேர்வு வைத்து அவர்கள் பின்தங்கிய பகுதிகளில் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்ட கற்பித்தல் பணிகளுக்காக உள்ளீர்க்கப்படவுள்ளனர்.

அந்தவகையில், சர்வதேச கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்கள் இந்நாட்டில் தொழிலைப் பெற்றுக் கொள்ள முடியும் என அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் நாயகம் சுட்டிக் காட்டியுள்ளார்.(2-6)

# உலக பொருளாதார சுதந்திரப் பட்டியல் 83வது இடத்தில் இலங்கை

(கொழும்பு)

உலக பொருளாதார சுதந்திர பட்டியலில் ஸ்ரீலங்கா 83 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக புதிய தரப்படுத்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இத்தரப்படுத்தலை Cana da's Fraser Institute மற்றும் Advocata Institute Sri Lanka ஆகியன இணைந்து வெளியிட்டுள்ளன.

162 நாடுகளை உள்ளடக்கியதாக வெளியிடப்பட்ட தரப்படுத்தலிலேயே இலங்கைக்கு 83 ஆவது இடம் கிடைத்துள்ளது. அதிக செழிப்பு , அரசியல் மற்றும் சுதந்திரம் என்பவற்றை முதல் நிலைப்படுத்தி முன்னெடுக்கப்படுகின்ற இப் பட்டியலில் ஹொங் கொங் மற்றும் சிங்கப்பூர் என்பன முறையே முதலாம் மற்றும் இரண்டாம் இடத்தில் உள்ளன.

இதேவேளை நியூசிலாந்து, சுவிட்ஸர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகள் இப்பட்டியலில் முதல் 10 இடங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# அரச ஆவணங்கள் இனி அரச அச்சகத்தில்

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

வெளிநாட்டுக் கடவுச் சீட்டுக்கள், அரச ஆவணங்கள் ஆகியவற்றை அரச அச்சகத் தில் மாத்திரம் அச்சிடுவதற்கு முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆவணங்களை அச்சிடுவதற் குத் தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்தல் உள்ளிட்ட திட்டம் வெகுஜன ஊடகத்துறை அமைச்சரினால், அமைச்சரவையில் முன் வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் வெளிநாட்டு அச்சகமொன்றினூடாக இவ் ஆவணங்கள் அச்சிடப்பட்ட நிலையில் தற்போது அரச அச்சகத்தில் அச்சிட நடவடிக்கை எடுக்கப்படுவதனூடாக அவ் வெளிநாட்டு செலாவணியை தக்க வைத்துக் கொள்வதற்கு அரசாங்கத்தினால் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (2-6)

# பொது அறிவித்தல்

## மாநகர சபைக்குச் சொந்தமான கடைகள் குத்தகை உரிமை மாற்றம் செய்தல்

யாழ்.மாநகர சபையினால் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள கீழ்வரும் இலக்கங்களைக் கொண்ட கடைகள் மாநகர சபையின் அங்கீகாரமின்றி பல்வேறு நபர்களுக்கு கைமாற்றப்பட்டுள்ளன. இதனால்' வாடகை அறிவிடுதல், குத்தகை புதுப்பித்தல் போன்ற செயற்பாடுகளில் பல்வேறு இடர்பாடுகளை மாநகர சபை எதிர்கொள்கின்றது.

எனவே வடக்கு மாகாண முதலமைச்சரின் NP/05/01/JMC/34 ஆம் இலக்க 2017.12.04ஆம் திகதிய அனுமதியின் பிரகாரம் தற்போது குறித்த கடைகளை நடாத்திக் கொண்டிருப்பவர்களின் பெயரிற்கு குத்தகை உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.
இன்றிலிருந்து இரு வாரங்களிற்குப் பின்னர் கீழ்க் குறிப்பிட்டுள்ள கடைகளை தற்போது நடாத்திக் கொண்டிருப்பவரிற்கு குத்தகை உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் கீழ்க்குறிப்பிட்டுள்ள கடைகளின் தற்போதைய குத்தகை உரிமையாளர்களின் குத்தகை உரிமம் இரத்துச் செய்யப்படுகின்றது என்பது இத்தால் அறியத் தரப்படுகின்றது.

### நவீன சந்தை உட்புறம்

| கடை இல. | குத்தகையாளர் பெயர் |
|---|---|
| 2 | தை.மொ.இப்திகார் |
| 3 | வி.பி.சத்தியமூர்த்தி |
| 4 | என்.கோபாலகிருஸ்ணன் |
| 9 | க.முத்துலிங்கம் |
| 10 | அப்துல் அஸீஸ் தாஜீன் |
| 11 | மீரான் கண்டு முகமது கரீம் |
| 12 | எம்.எம்.கரீம் |
| 13 | சோ.மன்மதராசா |
| 14 | சோ.மன்மதராசா |
| 15 | திருமதி.ச.தேவசிகாமணி |
| 16 | கந்தையா.இரட்ணசிங்கம் |
| 21 | நா.முருகபூபதி |
| 23 | கந்தையாப்பிள்ளை சண்முகராசா |
| 24 | ச.ஜெயக்குமாரன் |
| 26 | M.D.M.இஸ்பகான் |
| 27 | அ.கச்சுமுகமது |
| 28 | M.K.ஜனூந்தீன் |
| 29 | M.A.C.முஹீசீன் |
| 34 | திருமதி அன்னலட்சுமி நடராசா |
| 37 | திருமதி பரமநாதன் சியாமலா |
| 39 | மா.கந்தசாமி |
| 44 | எஸ்.எஸ்.அப்துல்காதர் |
| 46 | இராசரத்தினம் இராசாரம் |
| 51 | இ.இராஜேஸ்வரன் |
| 52 | கு.தட்சணாமூர்த்தி |
| 54A | சுப்பிரமணியம் சுதர்சன் |
| 57A | நமசிவாயம் நித்தியானந்தம் |
| 61 | திருமதி.இராசரத்தினம் பரிமளம் |
| 62 | ஆ.சிவதங்கமலர் |
| 63 | ஆ.சிவதங்கமலர் |
| 65 | தி.கந்தசாமி |
| 66 | தி.கந்தசாமி |
| 69A | E.H.A.சத்தார் |
| 72 | M.L.M.கஸீன் |

### நவீன சந்தை வெளிப்புறம்

| கடை இல. | குத்தகையாளர் பெயர் |
|---|---|
| 1 | M.A.ஆப்துல் அனீஸ் |
| 3 | சண்முகநாதன் சிறீக்காந் |
| 6 | திருமதி ச.இராசலிங்கம் |
| 8 | பி.வி.இராசசேகரன் |
| 10 | திருமதி ந.மதிவதனி |
| 11 | பே.பாலசுப்பிரமணியம் |
| 13 | M.நஜீப் |
| 14 | க.செல்லத்தரை |
| 18 | க.தர்மலிங்கம் |
| 22 | A.கச்சுமுகமது |
| 23 | M.A.C.கரீம் |
| கன்ரீன் | எஸ்.சீவரத்தினம் |

### நவீன சந்தை மேல்மாடி

| கடை இல. | குத்தகையாளர் பெயர் |
|---|---|
| 1 | ஏ.சி.சகாப்தீன் |
| 2 | K.P.ஆனந்தன் |
| 3 | வே.நடராசா கலைமகள் |
| 6 | யோசேப்பு சிப்பிரியன் |
| 7 | எம்.சாகுல்கமீத் |
| 8 | திருமதி தாமோதரம் தவமணி |
| 10 | க.அமிர்தலிங்கம் |
| 13 | சு.மகாலிங்கம் "சவரிமுத்து அன்சன்ஸ்" |
| 14 | S.S.ஜனுன் |
| 15 | எம்.எஸ்.ஜனுன் |
| 16 | சுப்பிரமணியம் சுதர்சன் |
| 17 | செ.நித்தியபவாணி |
| 19 | ப.கனகரத்தினம் |
| 20 | எம்.தேவராசா |
| 21 | ம.பீற்றர் |
| 23 | எஸ்.சிவராமன் |
| 24 | என்.கணேசன் |
| 25 | த.சிவசுப்பிரமணியம் |
| 28 | நிர்மலா ஜெயசிங்கம் |
| 30 | ச.இராசலிங்கம் |

### நவீன சந்தை 2ம் கட்டம்

| கடை இல. | குத்தகையாளர் பெயர் |
|---|---|
| 141 | ஆ.அமிர்தநாதன் |
| 142 | வ.வடிவேலு |
| 143 | மு.கணேசலிங்கம் |
| 146 | நா.பரமநாதன் |
| 149 | சி.சோதிராசா, சி.தர்மலிங்கம் |
| 152 | திருமதி க.விசாலாட்சி |
| 153 | க.விக்கினேஸ்வரன் |
| 154 | M.G.பசீர் |
| 160 | சி.ஜெயக்காந்தன் |
| 162 | M.M.ஜெலீன் |
| 163 | M.A.Nowfil |
| 165 | எஸ்.மொகைதீன் |
| 166 | M.D.M.இப்திகார் |
| 168 | சி.தர்மலிங்கம், சி.சோதிராசா |
| 169 | ப.பாசுபதம் |
| 170 | க.பாலேந்திரன் |
| 171 | M.U.M.ஜெமீன் |
| 173 | M.A.நௌபீல் |
| 174 | N.M.றிபாஸ் |
| 176 | என்.யு.எம்.தாகிர் |
| 178 | சி.சோமஸ்கந்தன் |
| 180 | அ.சிவராசா |
| 181 | ப.இரவீந்திரன் |
| 182 | வஸ்தியாம்பிள்ளை சீமான்பிள்ளை |
| 184 | இரத்தினம் பத்மநாதன் |
| 185 | ந.சிவநாதன் |

### பெரிய கடை

| கடை இல. | குத்தகையாளர் பெயர் |
|---|---|
| 1 | எம்.மிஸ்கின் |
| 2 | H.A.கமால்ரீன் |
| 3 | எம்.அகமதுகபீர் |
| 5 | எம்.கே.பவாமொலைகதீன் |
| 7 | S.H.S.மரைக்கார் |
| 8 | A.M.நஸ்லீம் |
| 9 | என்.அபுசாலி |
| 10 | எம்.எம்.அக்பர் |
| 11 | கே.எம்.சனூன் |
| 12 | N.M.L.பாருக் |
| 15 | A.M.சகுனூப் |
| 16 | S.K.அகமதுமுகைதீன் |
| 22 | A.C.சலாத் |
| 23 | N.சோமசுந்தரம் |
| 24 | கே.குணராசா |
| 25 | கணபதிப்பிள்ளை நடராசா |
| 26 | என்.நாகரெத்தினம் |
| 28 | வி.கே.சுப்பிரமணியம் |
| 29 | மு.முருகேசு |
| 30 | எஸ்.வைத்திலிங்கம் |
| 31 | கே.சீவரத்தினம் |
| 32 | கே.சரவணமுத்து |
| 35 | A.H.நஸீர் |
| 36 | எம்.மார்க்கண்டு |
| 40 | S.A.அப்துல் றகீம் |
| 43 | H.M.அப்பாஸ் |
| 46 | இ.இராஜமோகன் |
| 47 | எஸ்.அப்துல்காதர் |
| 48 | எம்.எம்.பஸீர் |
| 49 | S.A.சாகுல்கமீத் |
| 51 | M.U.M.அப்துல்காதர் |
| 53 | S.A.M.அப்துல்காதர் |
| 54 | ஏ.சோதிலிங்கம் |
| 55 | சு.குமாரசுவாமி |
| 56 | என்.தேவரர்சா |
| 57 | இ.இளையதம்பி |
| 59 | மா.விநாயகமூர்த்தி |
| 60 | எஸ்.கிருஸ்ணப்பிள்ளை |
| 62 | கோ.வாமதாஸன் |
| 63 | நா.ஏகாம்பரம் |
| 64 | க.அருணகிரிநாதன் |
| 65 | சி.இராசலிங்கம் |
| 70 | பொ.சிவசுப்பிரமணியம் |
| 74 | தா.கணபதிப்பிள்ளை |
| 75 | கா.பஞ்சாட்சரம் |
| 76 | க.வேலுப்பிள்ளை |
| 77 | இ.கனகராசா |
| 78 | க.ஆசைப்பிள்ளை |
| 81 | மு.தம்பிப்பிள்ளை |
| 82 | ந.இலங்கைநாதன் |
| 83 | ச.சிற்றம்பலம் |
| 85 | க.தில்லைநாதன் |
| 90 | மு.விஸ்வலிங்கம் |
| 91 | க.சீவரத்தினம் |
| 92 | சு.கணபதிப்பிள்ளை |
| 94 | வ.சிவக்கொழுந்து |
| 95 | தி.மகேந்திரராசா |
| 96 | செ.கோபாலகிருஸ்ணன் |
| 99 | A.H.அப்துல்ரசீன் |
| 100 | எம்.எம்.யூசப் |
| 102 | M.இசடின் |
| 103 | A.M.A.கரீம் |
| 105 | எம்.டி.எம்.இப்ராகிம் |
| 108 | சி.கந்தையா |
| 109 | கே.இரத்தினசிங்கம் |
| 114 | எஸ்.எம்.காசீம்மொகைதீன் |
| 116 | கே.மயில்வாகனம் |
| 118 | ப.மஃறூப் |
| 119 | கே.எஸ்.முகைதீன் |
| 121 | P.M.N.ஜவாகீர் |
| 122 | எம்.எஸ்.ரகீம் |
| 124 | எம்.சாகுல் கமீர் |
| 125 | எம்.அப்துல் கமீர் |
| 128 | M.E.பாத்திமா |

### தகரக்கடை

| கடை இல. | குத்தகையாளர் பெயர் |
|---|---|
| 63 | H.M.சக்காரியா |

### ஸ்ரான்லி வீதி

| கடை இல. | குத்தகையாளர் பெயர் |
|---|---|
| 1 | செ.சர்வானந்தன் |
| 2 | எஸ்.எம்.முகுந்தார் |
| 3 | இ.தொண்டதாபன் |
| 4 | சி.துரைச்சாமி |
| 5 | சே.சி.குமாரசாமி |

### பஸ் நிலையம்

| கடை இல. | குத்தகையாளர் பெயர் |
|---|---|
| 2 | சோ.நடராசா |
| 3 | நா.தம்பித்துரை |
| 6 | சு.ம.தம்பிப்பிள்ளை |
| 7 | க.தேவிகாராணி |
| 8 | சி.தங்கராசா |
| 9 | த.தங்கராசா |
| 15 | கு.சதாசிவம் |
| 17 | வே.வெற்றிவேலு |
| 19 | சி.சித்தானந்தன் |
| 20 | திருமதி வி.சிவகுமார் |
| 22 | மா.இராமஜெயம் |
| 24 | சந்திரலிங்கம் தனநாயகம் |
| 29 | திருமதி ம.ஜெயராணி |

### புதிய கடை

| கடை இல. | குத்தகையாளர் பெயர் |
|---|---|
| 3 | நா.சின்னராசா |
| 5 | சு.இரத்தினசபாபதி |
| 6 | சிவலிங்கம் மயூரதன் |
| 10 | திருமதி பா.கலியுகவரதராசா |
| 16 | சி.விஜயராஜா |

### சத்திரச்சந்தி

| கடை இல. | குத்தகையாளர் பெயர் |
|---|---|
| 50 | செ.மகேந்திரராசா |
| 58 | கே.கந்தையா |
| 59 | இராமலிங்கம் சுப்பிரமணியம் |
| 60 | செ.கந்தசாமி |
| 66 | எஸ்.சண்முகராசா |
| 67 | மு.சுப்பிரமணியம் |

### குருநகர் சந்தை

| கடை இல. | குத்தகையாளர் பெயர் |
|---|---|
| 13 | திரு.அ.பிரான்சிஸ் |
| 14 | திரு.செல்லையா நாகராசா |
| 15 | திரு.நாகேசு கலாநாதன் |
| 38 | திரு.சவரிமுத்து யேசுதாசன் றோச் |
| 47 | K.றமேஸ் |

### செங்குந்தா சந்தை

| கடை இல. | குத்தகையாளர் பெயர் |
|---|---|
| 8/1 | திரு.ரெங்கசாமி தில்லையம்பலம் |
| 2/1 | திரு.மகாலிங்கம் ராகவன் |

### நல்லூர் சந்தை

| கடை இல. | குத்தகையாளர் பெயர் |
|---|---|
| 15/6 | திரு.சிதம்பரப்பிள்ளை சண்முகராசா |

முதல்வர்
யாழ்.மாநகர சபை

(C-345)

# படகு கட்டும் தொழிற்சாலையை செயற்படுத்த நடவடிக்கை எடுங்கள் - அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

**காரைநகர் படகு கட்டும் தொழிற்சாலையை உடனடியாக செயற்படுத்துவது தொடர்பில் ஆராயுமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.**



அத்துடன், சீநோர் நிறுவனத்தின் ஊடாக பயணிகள் போக்குவரத்து படகுகளை உருவாக்கி அவற்றை கொழும்பில் பயணிகளின் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ள நிலையில் குறித்த வேலைத் திட்டம் தொடர்பிலும் ஆராயுமாறும் அமைச்சரினால் பணிக்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சின் செயற்றிட்ட ஆய்வு மற்றும் மீளாய்வுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிலையிலேயே சீநோர் அதிகாரிகளிடம் குறித்த விடயம் தொடர்பில் தெரிவித்துள்ளார்.

காரைநகரில் அமைக்கப்பட்டுள்ள சிறிய ரகப் படகுகளை உருவாக்கும் உட்கட்டுமானங்களைக் கொண்ட தொழிற்சாலையை உடனடியாக செயற்படுத்துவதன் மூலம் சிறிய ரகப் படகுகளை உருவாக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மீன், கருவாடு போன்றவற்றை படிப்படியாக குறைத்து உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பாகவும் இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் பொறிமுறையை ஒழுங்குபடுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அத்துடன், கடற்றொழில் அமைச்சின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற அனைத்து திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களையும் அனைத்து மாவட்டங்களிலும் ஒரே கட்டடத் தொகுதியில் இயங்கச் செய்வதன் ஊடாக மக்களுக்கு இலகுவான சேவையை வழங்குவதுடன் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையில் சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்த முடியும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில், அமைச்சுக் கட்டமைப்புக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத் திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் காலவரையறை நிர்ணயித்து அவை நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலையும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதானிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-2-8-4)







**"மூலிகையினால் தன்னிறைவு" என்ற ஜனாதிபதியின் கோரிக்கைக்கிணங்க நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மூலிகை மரங்கள் நாட்டும் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. (5-8-315)**

## கல்வியங்காட்டில் வாள்வெட்டு காயமடைந்தவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டில் நபர் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கால்கள் மற்றும் கைகளில் படுகாயமடைந்த குறித்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் யாழ்ப்பாணம் - கல்வியங்காட்டில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர் யாழ்ப்பாணம், நாயன்மார்க்கட்டு பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் நேற்றுக் காலை கல்வி யங்காடு பகுதியில் நின்ற போது, மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல், அவர் மீது சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (5-8)

## தடை செய்யப்பட்ட முறைகளைத் தடுத்து நிலையான முறைகளை ஊக்குவிப்போம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை தடுத்து நிலையான மீன்பிடி தொழிலை ஊக்குவிப்போம் எனும் தொனிப்பொருளில் மீனவ சமூகம் பொறுப்பு மிக்க அதிகாரிகள் மற்றும் ஒத்துழைப்பாளர்களுக்கிடையிலான கலந்துரையாடல் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு- கிழக்கு மாகாண இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசனின் பங்குபற்றுதலுடன் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் மாவட்ட இணைப்பாளர் பெனடிற் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

அதே நேரத்தில் குறித்த கலந்துரையாடலில் நாட்டில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாகவும் அவற்றினால் ஏற்படும் சமூக,பொருளாதார ரீதியான பாதிப்புக்கள் மற்றும் விளைவுகள் தொடர்பாக மீனவ சமூகத்தை சேர்ந்த பிரதி நிதிகளுக்கு தெளிவூட்டப்பட்டது. (5-2-4-285)

## சுய தொழில் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் அனுசரணையுடன் கொழும்புத்துறை ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டு சுய முயற்சிக் குழு நடத்தும் சுயதொழில் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறவுள்ளது. இக் கண்காட்சியும் விற்பனையும் நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கொழும்புத்துறை மாதர் சங்க முற்றத்தில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திற்கு அருகில் நடைபெறும். (5)

## இளைஞர் விருதுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(குப்பிழான்)

யாழ்.மாவட்டத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் 2020 ஆம் ஆண்டுக்கான மாவட்ட மட்டத்திலான இளைஞர் விருதுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்ளை யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது புதன்கிழமைகளில் தத்தமது பிரதேச செயலகங்களின் இளைஞர் சேவை அதிகாரிகளிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்கான முடிவுத் திகதி 30.09.2020 என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்டக் காரியாலயம், இல.28, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடனோ அல்லது 021 222 2526 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-18)

## கடலின் நடுவில் நடப்பட்டிருந்த பனங்குற்றிகள் அகற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலை தொடக்கம் கோவிலாக்கண்டி வரையான கடற்பரப்பில் நாட்டப்பட்டிருந்த பனங்குற்றிகள், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் நேற்று முன்தினம் அகற்றப்பட்டன.

யுத்த காலத்தில் இராணுவத்தினரால் பாதுகாப்புக் காரணங்களுக்காக குறித்த கடற்பிரதேசத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான பனங் குற்றிகள் நாட்டப்பட்டன.

பனங்குற்றிகள் இதுவரை அகற்றப்படாத நிலையில் மீனவர்களின் தொழில் நடவடிக்கைளுக்கு இடையூறாக காணப்பட்டன. இந்நிலையில், அண்மையில் ஆய்வுப்பணிகளுக்காக குறித்த பிரதேசத்திற்கு சென்ற களப்பு அபிவிருத்தி திட்ட அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைய கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சிகளையடுத்து இராணுவத்தினரால் குறித்த பனங் குற்றிகள் அகற்றப்பட்டன. (5-8)

# விவசாயிகளிடம் சந்தைகளில் அறவிடப்படும் 10 சதவீத கழிவு ஒக்டோபர் முதல் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)



**யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள சந்தைகளில் விவசாயிகளின் விளைபொருள்களுக்கு 10 சதவீத கழிவு அறவிடப்படுவது எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து நிறுத்தப்படும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.**

கடந்த 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தலைமையில் இடம்பெற்ற மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விவசாயிகளின் விளைபொருள்களுக்கு 10 சதவீத கழிவு அறவிடப்படும் நடைமுறையை நிறுத்துமாறு யாழ். மாவட்ட விவசாய அமைப்புக்களினால் வலியுறுத்தப்பட்டது.

அதற்கு அமைவாக இதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என பணிந்ததோடு ஏனைய பிரதேசங்களில் இவ்வாறான நடைமுறை இல்லை என்ற விடயத்தினை விவசாய அமைச்சர், வடமாகாண அதிகாரிகளுக்கு தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய குழுவின் தலைவரிடம் வினவிய போது, "இந்த 10 சதவீத கழிவு அறவிடப்படுவதனை நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உடனடியாக கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது என்றும் எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து புதிய நடைமுறை செயற்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

இதன்மூலம் விவசாயிகளின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்தார்.

விவசாய அமைச்சர் தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, யாழ்.மாவட்டத்திலுள்ள சந்தைகளில் விவசாயிகளின் விளைபொருள்களுக்கு 10 சதவீத கழிவு அறவிடப்படுவது எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து நிறுத்தப்படும் என்று அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார். (5-8)

## சனசமூகங்கள் ஊடான அபிவிருத்திகள் இழுபறி நிலையில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் சனசமூக நிலையங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்ட சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பல முடிவு பெறாத நிலையில் காணப்படுவதாக அண்மையில் இடம்பெற்ற பிரதேசசபை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பட்ஜெட் ஊடாக மேற்கொள்ளப்படும் சிறிய அபிவிருத்தி ஒப்பந்த வேலைகளை சனசமூக நிலையங்கள் ஊடாக மேற்கொள்ள சில உறுப்பினர்கள் அனுமதி கோரிய போதே இவ் விடயம் பிரதேசசபை நிர்வாகத்தால் சுட்டிக்காட்டப்பட்டது.

உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்று அறிக்கையின் பிரகாரம் சனசமூக நிலையங்கள் ஊடாக ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ள அனுமதி இருந்தும் அவ்வாறு வழங்கப்பட்ட வீதி அபிவிருத்தி உள்ளிட்ட வேலைத் திட்டங்கள் பல முடிவின்றி இழுபறி நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிய அபிவிருத்தி திட்டங்களை சனசமூக நிலையங்கள் ஊடாக மேற்கொள்ளும் போது நிதி போதாமல் அபிவிருத்தித் திட்டம் அரைகுறையில் நின்றாலும் சனசமூக நிலைய நிதி மற்றும் ஏனையவர்களின் நிதிப்பங்களிப்புடன் வேலைத்திட்டங்களை முழுமையாக்க முடியும் என உறுப்பினர்கள் சிலர் கருத்து தெரிவித்திருந்தனர். (5-4-30)

## ஆன்மீகக் கருத்தமர்வு


(யாழ்ப்பாணம்)

வணபிதா சா.ம.செல்வரட்ணம் (கரவையூர் செல்வம்) அடிகளாரின் உலகளாவிய ஆன்மீகம் பற்றிய கருத்தமர்வு யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத்துறையின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் இன்று 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

பிரபலமான உளவியலாளரும் ஆன்மீக வழிகாட்டியுமான அடிகளார், சமயங்கள் கடந்த உலகளாவிய ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

மேற்படி நிகழ்வில் கலந்து பயன்பெற ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் அழைக்கப்படுகிறார்கள். (5-2-4)

## யாழ். செம்மணி பகுதியில் நரிகள் நடமாட்டம்




(யாழ்ப்பாணம்)

யாழ். செம்மணி மயானத்தை அண்டிய வயல்வெளிகளில் நரிகள் நடமாட்டம் காணப்பட்டதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த நரிகள் அப்பகுதிக்கு எவ்வாறு வந்தன என்பது தொடர்பிலும், அவற்றால் மனிதர்களிற்கு ஆபத்து ஏற்படுமா? என்பது தொடர்பிலும் மக்கள் மத்தியில் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

நரிகளால் வீட்டு வளர்ப்புக்களான கோழி, ஆடு உள்ளிட்டவற்றுக்கு பாதிப்புக்கள் ஏற்படுமிடத்து வாழ்வாதாரத்திலும் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்த காட்டு விலங்குகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-8)



**கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழிகாட்டலின் அடிப்படையில் கடற்றொழில் திணைக் களத்தினால் வழங்கப்பட்ட ஐஸ் பெட்டிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தில் இடம்பெற்றது. அதன்போது 65 ஐஸ் பெட்டிகள் வழங்கப்பட்டன.**

## சனசமூக நிலையம் திறப்பு

(சாவகச்சேரி)



கச்சாய் வடக்கு கொடிகாமம் பகுதியில் அமைக்கப்பட்ட ஒட்டங்கேணி சனசமூக நிலையத் திறப்பு விழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

திருமதி க.மங்கையர்க்கரசியின் காணி மற்றும் நிதிப் பங்களிப்பில் அமையப் பெற்ற குறித்த சனசமூக நிலையத்தை சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் மயூரன், கொடிகாமப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஓய்வு நிலை அதிபர் கந்தையா, நிதிப் பங்களிப்பாளர் திருமதி க.மங்கையர்க்கரசி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பிரதேச சபைத் தவிசாளர் பத்திரிகைகளை வழங்கி சனசமூக நிலையச்செயற்பாட்டினை ஆரம்பித்து வைத்திருந்தார். (5-4-30)

# 20 ஆம் திருத்தத்திற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு ஆதரவு கிடைக்காது

## அடித்துக் கூறும் கிரியெல்ல

(கொழும்பு)

பிரதமரையும் பாராளுமன்றத்தையும் பலவீனப்படுத்தும் நோக்கத்தில் கொண்டுவரப்பட்டுள்ள 20 ஆம் திருத்தத்திற்கு அரசாங்கத்திற்குள்ளேயே முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

எனவே 20 ஆம் திருத்தத்திற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கப்போவதில்லை என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசியல் அமைப்பொன்று உருவாக்கப்பட பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த முயற்சிகள் அனைத்தின் போதும் உரிமையாளர்கள் இருந்தனர்.

ஆனால் 20 ஆம் திருத்தமாக கொண்டுவந்துள்ள அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு உரிமையாளர்ஒருவரேனுமில்லை.

யார் இந்த 20 ஆம் திருத்தத்தை உருவாக்கியதென்பது தெரியாமலேயே ஒரு யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சர் உள்ளிட்ட எவருமே இதற்குப் பொறுப்பேற்க மறுக்கின்றனர்.

ஆகவே இப்போதே இவ்வாறான நிலைமை என்றால் 20 ஆம் திருத்தம் நிறைவேற்றப்பட்டால் என்னவாகும் என்பதை சிந்திக்க வேண்டும். அரசாங்கத்திற்கு மக்கள் ஆணையிருந்தாலும் கூட இவ்வாறான ஒரு திருத்தத்தை கொண்டுவர மக்கள் ஆணை வழங்கவில்லை.

எவ்வாறு இருப்பினும் சுயாதீன ஆணைக்குழுக்கள் அனைத்தையும் இல்லாதொழித்து முழுமையாக ஜனாதிபதிக்கு சகல அதிகாரங்களையும் வழங்கவே முயற்சிக்கிறது. அரசியல் அமைப்பு சபை ஒன்றினை நிராகரிக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.



சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியில் தான் சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டன.

அதன் பின்னர் சுயாதீன ஆணைக்குழுக்கள் இருந்துள்ளது.

எனினும் 18 ஆம் திருத்தத்தின் மூலமாக சுயாதீன ஆணைக்குழுக்களை நீக்க ராஜபக்ஷ அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

அதன் பின்னர் நாம் ஆட்சிக்கு வந்து 19 ஆம் திருத்தத்தை கொண்டுவந்து மீண்டும் சுயாதீன ஆணைக்குழுக்களை உருவாக்கினோம். பாராளுமன்ற அதிகாரத்தை பலப்படுத்தினோம்.

இன்று மீண்டும் சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாது செய்து, பாராளுமன்றத்தை பலவீனப்படுத்தி நிறைவேற்று அதிகாரத்தை பலப்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருகின்றது எனத் தெரிவித்தார். (ஜ-4)

# ஓமானிலிருந்து 290 பேர் நாட்டிற்கு



(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஓமானில் சிக்கித் தவித்த 290 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான விசேட விமானத்தில் அவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு ஓமானின் மஸ்கட்டிலிருந்து நாட்டை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர்.சோதனை மேற் கொள்ளப்பட்டதுடன் அவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஜ-4)


## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. தோட்டம் சம்பந்தமாக சகல வேலைகளும் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். குடும்பமாக தங்க வசதி உண்டு. தோட்டத்தில் தனியாக வேலை செய்து பழக்கப்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

ஆரம்பச் சம்பளம்:- 30,000.00 (C-253)

T.P:- +94 77 168 1697, +94 77 113 3667

## சேவை

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை. AAA Gold Center (C-1034)

076 568 4346

## உதவியாளர் தேவை (Room Boy)

யாழ்.கச்சேரிக்கு அருகாமையில் இயங்கும் YMCA நிறுவனத்திற்கு Room Boy தேவை. மேலதிக விபரங்களுக்கு YMCA, 109, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

பொதுச் செயலாளர். (3898)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 39 சூரி, செவ் 12 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. அரச உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/7621

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: 24 சூரி,செவ் 12 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி மென்பொருள் பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர் போன்ற உயர் பதவி வகிப்போர்.
தொ.இ: B/7623

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: செவ் 7 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி. பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: பொறியியலாளர், வைத்தியர் போன்ற உத்தியோகத்தர்
தொ.இ: B/7624

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: 13 செவ் 2 இல் உயரம்:5'8"
தகைமை/தொழில்: Civil Engineering Work Supervisor (Gov)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/7639

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: செவ் 11 இல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்: ACCA, Ass.Accountant (private)
எதிர்பார்ப்பு: படித்த தகுந்த மணமகன்
தொ.இ: G/9213

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: மூலம் 3
கி.பா: 12 3/4 சூரி,செவ் 6 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/9228

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா: 34 செவ் 2 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி பட்டதாரி பயிலுநர்
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர் போன்றோர்
தொ.இ: G/9236

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4
கி.பா: சூரி,செவ் 1 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.Sc, MBA, தனியார் நிறுவனத்தில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, நிரந்தர உத்தியோகத்தர்
தொ.இ: G/9237

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

## திருமதி. அழுதவல்லி தவராஜசிங்கம்

(இந்து சமயம் விசேட பயிற்றப்பட்ட ஆசிரியர் S.L.T.S.-I)

பகுதித் தலைவர் (தரம் 6, 7, 8) பாட இணைப்பாளர்
மற்றும் எமது பாடசாலையின் பழைய மாணவி.





ஆசிரியர் சேவை:
16.04.1985 - 05.07.1987 - இ/கலபொட தமிழ் வித்தியாலயம்
06.07.1987 - 16.02.1988 - இ/இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம்
17.02.1988 - 31.12.1989 - யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
01.01.1990 - 31.12.1991 - இ/இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம்
01.01.1992 - 21.09.2020 - யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.

(3899)

வாழ்த்துவோர்:-
பாடசாலைச் சமூகம், யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.

# ஆறுமுகத்தான் புதுக்குளத்தில் யானை அட்டகாசம் வீடு, மரங்கள் சேதம், நெல் மூடைகள் நாசம்





(கண்டாவளை)

**வவுனியா, ஓமந்தை ஆறுமுகத்தான் புதுக்குளம் பகுதியில் யானையின் அட்டகாசத்தால் வீடு ஒன்று சேதமடைந்துள்ளதுடன், களஞ்சியப்படுத்தியிருந்த நெல் மூடைகளும் நாசமாகின.**

நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது.

ஓமந்தை, ஆறுமுகத்தான் புதுக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட செங்கராத்திமோட்டை கிராமத்திற்குள் புகுந்த யானை ஒன்று, சிவலிங்கம் சிவரூபன் என்பவரின் குடும்பத்தின் அரை நிரந்தர வீட்டின் சுவர்களை இடித்து சேதப்படுத்தியுள்ளது.

அத்துடன், குறித்த வீட்டில் களஞ்சியப்படுத்தியிருந்த நெல் மூடைகளையும், பயன்தரும் மரங்களையும் நாசம் செய்துள்ளது. யானையின் தாக்குதலில் இருந்து தப்பிய வீட்டார் யானையை விரட்ட முயன்ற போதும் அது பயனளிக்கவில்லை. சுமார் ஒரு மணி நேரம் அங்கு அட்டகாசம் புரிந்த யானை அதன் பின் காடு நோக்கிச் சென்றது.

யானையின் தாக்குதலில் வீடு சேதமடைந்த போதும் வீட்டில் வசித்தவர்கள் எவருக்கும் தெய்வாதீனமாக பாதிப்பு ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (5-2-4-250)



கிளிநொச்சி ஏ-9 வீதியின் அறிவியல் நகர் தொழில்நுட்ப கல்லூரிக்கு அண்மித்த பகுதியில் நேற்று பகல் பாதசாரிகள் கடவை ஊடாக வீதியைக் கடக்க முற்பட்ட ஒருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் காயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் காயமடைந்த நிலையில் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார் என தெரிவிக்கப்படுவதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (படம்-கண்டாவளை செய்தியாளர்)



பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன், கிளிநொச்சி இரணைமடு விவசாய சம்மேளன உறுப்பினர்களை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார். (படம்: முறிகண்டி செய்தியாளர்)

## மன்னார் அரச, தனியார் போக்குவரத்து சேவை இணைந்து செயற்பட முடிவு எடுக்கப்பட்டுள்ளது

(மன்னார்)

மன்னார் நகர சபையின் கீழ் உள்ள புதிய பேருந்து தரிப்பிடத்தில் மன்னார் மாவட்ட தனியார் பேருந்து சேவை மற்றும் இலங்கை அரச போக்குவரத்துச் சேவைகள் இணைந்த சேவையாக மேற்கொள்வதில் ஏற்பட்ட பிரச்சினைக்கு நேற்று முன்தினம் தீர்வு எட்டப்பட்டுள்ளது.



அரச மற்றும் தனியார் போக்குவரத்துக்கள் இணைந்த சேவையை மேற்கொள்வது தொடர்பாக தொடர்ச்சியான முரண்பாடுகள் நிலவி வந்தன.

இந்த நிலையில் வட மாகாண ஆளுநரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் விசேட கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், மன்னார் நகர முதல்வர் ஞா.அன்ரனி டேவிட்சன், மாவட்டச் செயலக அதிகாரிகள், மன்னார் மாவட்ட அரச, தனியார் போக்கு வரத்து சங்க அதிகாரிகள், மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிகாரிகளினால் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு சுமுகமான முறையில் ஒன்றிணைந்த நேர அட்டவணைக்கு அமைவாக போக்குவரத்து சேவையை மேற்கொள்ள கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கு அமைவாக எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு அரச, தனியார் போக்குவரத்துச் சேவைகள் புதிய பேருந்து தரிப்பிடத்தில் இருந்து ஒன்றிணைந்த நேர அட்டவணைக்கு அமைவாக இணைந்த போக்குவரத்து சேவையை மேற்கொள்ள முடிவு எடுக்கப்பட்டது.

போக்குவரத்துச் சபையின் தலைவரின் தலைமையில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் புதிய நேர அட்டவணை தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவது எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

அதுவரை பழைய நேர அட்டவணைக்கு அமை வாக அரச, தனியார் போக்கு வரத்து சேவைகள் ஒன்றி ணைந்த சேவையாக முன்னெடுக்கப்படும் என சுமுகமான முடிவு எடுக்கப்பட்டது. (5-4-285)

## புகையிரத கடவைக் காப்பாளர்கள் நிரந்தர நியமனம் கோரி மனு



(நெளுக்குளம்)

அகில இலங்கை ரீதியில் புகையிரதக்கடவை காப்பாளர்கள் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் கொழும்பில் போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகேயை வடக்கு கிழக்கு புகையிரதக்கடவை காப்பாளர் சங்கத்தின் தலைவர் தலைமையில் சென்ற குழுவினர் சந்தித்தனர்.

இதன்போது புகையிரதக் கடவை ஊழியர்களின் பிரச்சினை தொடர்பான மனுவையும் கையளித்திருந்தனர்.

புகையிரதக்கடவை காப்பாளர்களுக்கான நிரந்தர தீர்வை புகையிரதத் திணைக்களம் மற்றும் ஜனாதிபதியுடன் பேசி ஒரு வாரத்தில் பெற்றுத் தரு வதாக போக்குவரத்து அமைச்சர் வாக்குறுதி வழங்கியுள்ளதாக வடக்கு- கிழக்கு புகையிரதக் கடவை காப்பாளர் சங்கத்தின் தலைவர் றொகான் ராஜ்குமார் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நிரந்தர தீர்வை ஒரு வாரத்தில் பெற்றுத்தருவதாக போக்குவரத்து அமைச்சர் வாக்குறுதி வழங்கியுள்ளதாக வடக்கு- கிழக்கு புகையிரதக்கடவைக் காப்பாளர் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (5-2-4-299)

# இராசிபலன்

18.09.2020
புரட்டாதி 02, வெள்ளிக்கிழமை
பிரதமை பிற்பகல் 3.07 மணிவரை
உத்தரம் முற்பகல் 9.30 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
சந்திராஷ்டமம் பூரட்டாதி, சித்தாமிர்தம் வளவன்


மேஷம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், இலாப நோக்கோடு பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


ரிஷபம்

மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், கனவுகள் நனவாக கணபதியை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.


மிதுனம்

யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வழிபட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.


கடகம்

கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.


சிம்மம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


கன்னி

ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.


துலாம்

பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.


விருச்சிகம்

குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


தனுசு

குடும்ப ஒற்றுமை கூடும் நாள், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.


மகரம்

உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், ஆரோக்கியமான நாள்.


கும்பம்

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.


மீனம்

தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

அறிவு தலைவனாகவும் உணர்வு தொண்டனாகவும் இருக்க வேண்டும்

# இலங்கையின் பொருளாதாரம் 5.5 சதவீதமாக குறைவடையும்

## ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரிக்கை

**(கொழும்பு)**

**கொரோனாத் தாக்கத்தின் விளைவாக இவ் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 5.5 சதவீதமாக குறைவடையும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி கணித்துள்ளது.**

இது தெற்காசியாவிற்குள் மூன்றாவது மோசமான செயல் திறன் என்றும் கொவிட்-19 பரவலுடன் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதால் சுற்றுலாவை பெரிதும் நம்பியுள்ள மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை தெற்கு ஆசியாவின் பொருளாதார வளர்ச்சியானது மொத்தமாக 6.8 சதவீதமாக குறைவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மாலைதீவின் பொருளாதாரம் **20.5%** ஆகவும் இந்தியாவின் பொருளாதாரம் **9%** ஆகவும் பாகிஸ்தானின் பொருளாதாரம் **0.4%** ஆகவும் ஆப்கானிஸ்தானின் பொருளாதாரம் **5%** ஆகவும் வலுவிழக்கும் என்றும் எனினும் 2020 ஆம் ஆண்டில் பங்களாதேஷின் பொருளாதாரம் **5.2%** ஆகவும் பூட்டானின் பொருளாதாரம் **2.4%** ஆகவும் நேபாளம் **2.4%** ஆகவும் வளர்ச்சியடையும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# தேங்காய் விலை தொடர்பில் அமைச்சரவையில் ஆராய்வு

(கொழும்பு)

நாட்டில் தேங்காயின் விலை அதிகரித்து செல்வதையடுத்து, அதை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தேங்காயின் விலையை 75 ரூபாவாக நிர்ணயித்து அரசாங்கத்திடம் யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தேங்காய் விலை மற்றும் தேங்காய் எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்துவது பற்றி கவனம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விவகாரம் விவாதிக்கப்பட்டது.

எனினும், விலை தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. குறித்த அமைச்சரவைக் கூட்டத்தில் தேங்காய் எண்ணெய் இறக்குமதியை நிறுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் அளவை அதிகரிக்க ஒரு திட்டத்தை வகுப்பது குறித்து விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன. (ஜ-4)

# பொலிஸார் மீது தாக்குதல் ஐந்து சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

பண்டாரகம அட்டலுகம பகுதியில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் தலைமறைவாகியிருந்த மேலும் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பலாங்கொட கல்தொட்ட பகுதியில் தலைமறைவாகியிருந்த நிலையிலேயே குறித்த சந்தேக நபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கல்தொட்ட பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். (ஜ-4)

# அங்கொட லொக்காவின் மரணத்தில் திருப்பம்

## வெளியானது அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இருந்து தப்பிச் சென்ற நிலையில் தமிழகம் கோயம்புத்தூரில் வசித்து வந்த இலங்கையின் பாதாள உலக முக்கியஸ்தரான லசந்த சந்தன பெரேரா என்று அழைக்கப்படும் அங்கொட லொக்கா மாரடைப்பு காரணமாகவே இறந்தார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவரது மரணத்தில் எந்த விதமான காரணங்களும் இல்லை என்பது பிரேத பரிசோதனை அறிக்கையில் இருந்து தெரியவந்துள்ளதாக இந்திய பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.


பிரேத பரிசோதனையை தவிர வேறு சோதனைகளிலும் மாரடைப்பே மரணத்துக்கான காரணம் என்பது தெரியவந்துள்ளது.

ஏற்கனவே லொக்காவுடன் வசித்து வந்த இலங்கை பெண்ணான அமானி தாஞ்சி என்ற இலங்கை பெண் லொக்காவுக்கு நஞ்சூட்டி கொலை செய்ததாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

21

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



2.துணைவிதி:- குடியிருப்பு வீடுகள்

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (22) நகரசபைச் சட்டம்- 157(9)(e) பிரதேச சபை சட்டம்- 126 (ix)(e)

3.துணைவிதி:- கழிவறை நிர்மாணம்

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (3)(a) மற்றும் 272 (5)(b).(c) நகரசபைச் சட்டம்- 157(8)(d). 157(9)(c) பிரதேச சபை சட்டம்- 126 (ix)(c)

4.துணைவிதி:- ஹோட்டல்

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (19) நகரசபைச் சட்டம்- 157(9)(h) பிரதேச சபை சட்டம்- 126 (ix)(h)

5.துணைவிதி:- உணவகங்கள், சிற்றுண்டிச்சாலை மற்றும் தேநீர் கடை

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநக்ர சபைச் சட்டம்- 272 (22) நகரசபைச் சட்டம்- 157(9)(h) பிரதேச சபை சட்டம்- 126 (ix)(h)

6.துணைவிதி:- பேக்கரி

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (8)(a) நகரசபைச் சட்டம்- 157(9)(h) பிரதேச சபை சட்டம்- 126- (ix)(h)

7.துணைவிதி:- பாற்பண்ணை மற்றும் வியாபாரம்

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (23) நகரசபைச் சட்டம்- 157(9)(i) பிரதேச சபை சட்டம்- 126 (ix)(i)

8.துணைவிதி:- மீன் விற்பனை

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (8)(C) நகரசபைச் சட்டம்- 157(9)(m) பிரதேச சபை சட்டம்- 126 (ix)(f)

9.துணைவிதி:- இறைச்சி விறபனை

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்-145,146 மற்றும் 272 (8)(c).(d) நகரசபைச் சட்டம்- 157(9)(n) பிரதேச சபை சட்டம்- 126 (ix)(k)

10.துணைவிதி:- விரும்பத்தகாத மற்றும் ஆபத்தான வியாபாரம்

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272(15) நகரசபைச் சட்டம்- 157(9)(n) பிரதேச சபை சட்டம்- 126 (ix)(k)

11.துணைவிதி:- சலவை

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (21) நகரசபைச் சட்டம்- 157(9)(W) பிரதேச சபை சட்டம்- 126 (ix)(S)

12.துணைவிதி:- நடமாடும் வர்த்தகர்கள்

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (20)(b) நகரசபைச் சட்டம்- 157(9)(m) பிரதேச சபை சட்டம்- 126 (X)(a)

13.துணைவிதி:- மாடு அறுக்குமிடம்

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272(9) நகரசபைச் சட்டம்- 157(10)(a). 128 பிரதேச சபை சட்டம்- 126 (ix)(i)

14.துணைவிதி:- பொதுச் சந்தைகள்

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (28)(d) நகரசபைச் சட்டம்- 157(11) பிரதேச சபை சட்டம்- 126 (xii)

15.துணைவிதி:- நீர் வழங்கல்

வருமான வகை:- நீர்க் கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (28)(a) நகரசபைச் சட்டம்- 157(12)(g) பிரதேச சபை சட்டம்- 126 (xiii)

16. துணைவிதி:- நூலகம்

வருமான வகை:- அங்கத்துவக் கட்டணம் மற்றும் அபராதக் கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 188 (1)(p) நகரசபைச் சட்டம்- 157(13) பிரதேச சபை சட்டம்- 126 (xiv)

17.துணைவிதி:- சிகையலங்கார சலூன்கள் மற்றும் தலைமுடி வெட்டும் கடைகள்

வருமான வகை:- அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (14) நகரசபைச் சட்டம்- 157(9)(i) பிரதேச சபை சட்டம்- 126 (xxiii)

18.துணைவிதி:- விளம்பர அறிவிப்புகள்/காட்சிப்படுத்தலுக்கான சூழல்

வருமான வகை:- அனுமதி வழங்கப்படுவதற்கான கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (27) நகரசபைச் சட்டம்- 157(6)(g).(7)(h) பிரதேச சபை சட்டம்- 126 (XXX)

19.துணைவிதி:- காணி மற்றும் கட்டட உரிமையாளர்களின் பெயர் மற்றும் முகவரி பதிவு செய்தல் மற்றும் சோதனையிடலுக்கான தவணை அறிக்கை கோரல்

வருமான வகை:- பதிவு செய்தல் மற்றும் சோதனை செய்வதற்கான கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (7)(b) நகரசபைச் சட்டம்- 157(b).(d) பிரதேச சபை சட்டம்- 126 (v)(b)(d)

20. துணைவிதி:- அசையாச் சொத்துக்கள் தொடர்பான அடகுகள் மற்றும் அடகு வைத்தவர்களை பதிவு செய்தல்

வருமான வகை:- பதிவு செய்தல் மற்றும் சோதனை செய்வதற்கான கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (7)(d) நகரசபைச் சட்டம்- 157(5).(d) பிரதேச சபை சட்டம்- 126 (v)(d)

21.துணைவிதி:- வாகனம் நிறுத்துதல்

வருமான வகை:- வாகனம் நிறுத்துவதற்கான கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (32) நகரசபைச் சட்டம்- 157(14)(a) பிரதேச சபை சட்டம்- 126 (vii)(h)

### சாத்தியமான வருவாய்கள்

ஏற்கனவே சபை அறவிடுகின்ற வருமான மூலங்களூடாக மேலும் பெற்றுக்கொள்ளக்கூடிய வருமானங்களை இவ்வகையில் கருதலாம். அதற்கிணங்க அவ்வவ்வருமான மூலங்களுக்கு ஏற்புடைய வகையில் கீழ் காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் சாத்தியமான வருவாய்களை விருத்தி செய்து கொள்ள முடியும்.

அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் அனைத்து வசதிகளுடனும் அபிவிருத்தியடைந்துள்ள பிரதேசங்களை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களென அறிவித்து அவற்றை ஆதன மதிப்பீட்டு வரிக்கு உட்படுத்தல்.

பணம் அறவிடப்படாது நடத்தப்படுகின்ற சேவைகளுக்காக செலவழிக்கப்படுகின்ற மீண்டு வரும் செலவுகளை மீட்டிக்கொள்ளும் வண்ணம் ஆதன மதிப்பீட்டு வரிச் சதவீதத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

குறைந்தது ஐந்து வருடத்திற்கொருதரம் சொத்துக்களின் வருடாந்த பெறுமதியினை மீள்பரிசீலனைக்குட்படுத்தல்.

மன்றத்திடம் உள்ள சொத்துக்களை வாடகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் மாத வாடகையை மீண்டும் மதிப்பீட்டுக்குட்படுத்தல்.

அவ்வாறே யாதேனும் கட்டணம் அறவீட்டின் கீழ் வழங்கப்படும் சேவைகளை வழங்குவதற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள், அச்சேவைகளை வழங்குவதற்கான செலவினை கருத்தில் கொண்டு கட்டணங்களை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் நடத்தப்படுகின்ற அனைத்து வர்த்தக, கைத்தொழில் மற்றும் வியாபாரத் தளங்களை இனங்கண்டு வரித்தொகை அல்லது அனுமதிப்பத்திர கட்டணத்தின் கீழ் அல்லாத வர்த்தகங்களிலிருந்து வர்த்தக வரி அல்லது கட்டணங்களை அறவிடல்.

### புதிய வருமான வழிகள்

பொதுவாக உள்ளூராட்சி மன்றங்கள் வழக்கமாக அறவிடுகின்ற வருமானங்களுக்கு மேலதிகமாக புதிய வருமான மூலங்களில் அவதானம் செலுத்துவது மிகவும் முக்கியமாகும். அதன்படி வழக்கமான வழிகளில் அல்லாத வருமான மூலங்களாக பின்வருவனவற்றை இனங்காணலாம்.

i. அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீதான வரி.

ii.மயான அஸ்தி அறைக் கட்டணம்.

iii. அடக்கம் செய்யும் இடத்துக்கான கட்டணம்.

iv. குப்பைக் கட்டணம் (வியாபார இடம் மற்றும் அரச நிறுவனங்கள்).

v. விளையாட்டு மைதான கட்டணம்.

vi. கூட்ட மண்டபக் கட்டணம்.

vii. விழா மண்டப கட்டணம்.

viii. சந்திப்புகளுக்கான (புத்துணர்ச்சியூட்டும்) மத்திய நிலையங்களை உருவாக்குதல்.

ix. வர்த்தக வியாபாரங்களை ஆரம்பித்தல்.

x. மேலதிக நிதியை முதலீடு செய்வதன் மூலம் வட்டியை பெற்றுக்கொள்ளல்.

இதற்கு மேலதிகமாக உள்ளூராட்சி மன்றங்களின் மீள் கட்டமைப்பு தொடர்பாக மறுபரிசீலனை ஆணைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளவாறு சுய/சொந்த உற்பத்தி வருமானங்களை விருத்தி செய்து கொள்வதற்காக பின்வரும் விடயங்களை செயற்படுத்துவதில் அவதானம் செலுத்துவது மிக முக்கியமானதாகும்.

i. நீர் விநியோகத்தினை பொறுப்பேற்கக்கூடிய ஆற்றல் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் நீர் தொடர்பான பிரேரணைகளை உருவாக்கிக் கொள்ளுதல்.

ii. பிரதேசத்திலுள்ள தொல்பொருளியல், கலாசார மற்றும் இயற்கை அழகுடனுள்ள இடங்களை மேம்படுத்தி சுற்றுலாத்துறையுடன் தொடர்புபடுத்தல்.

iii. விடுதிச் சேவையை மீண்டும் ஆரம்பித்தல்.

iv. பொதுமக்கள் பூங்கா மற்றும் திறந்த பிரதேசங்களை உருவாக்கல்.

v. சிறிய கைத்தொழில் பேட்டைகளை அமைத்தல்.

vi. ஆயுர்வேத உற்பத்திகளை மேற்கொள்ளல்.

vii. சிறந்த நிலையிலான முன்பள்ளிகள் மற்றும் பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களை அமைத்தல்.

viii. தீயணைப்புச் சேவைகளை வழங்குதல்.

ix. வியாபார சந்தைகள்மற்றும் கிராமியச் சந்தைகளை அபிவிருத்தி செய்தல்.

x. ஆற்றலுள்ள மற்றும் வலுவான உள்ளூராட்சி மன்ற போக்குவரத்து சேவைகளை ஆரம்பித்தல்.

xi. ஆயத்தநிலை சீமெந்துப் பொருட்கள் உற்பத்தியும் விநியோகித்தலும்.

xii. வாகனச் சேவை வழங்கும் மத்திய நிலையங்களை ஆரம்பித்தல்.

xiii. வாகனப் பராமரிப்புப் பிரிவுகளை ஆரம்பித்தல்.

xiv. வசதிகளுடன் கூடிய ஆயுர்வேத மத்திய நிலையமொன்றை விருத்தி செய்தல்.


(தொடரும்...)

# நிதியைத்திருப்பி அனுப்பியதாக பொய்ப்பிரசாரம் மேற்கொள்ளுவதை உடனடியாக நிறுத்துங்கள்

## வடக்கு மாகாணத்தின் முன்னாள் கல்வியமைச்சர் சர்வேஸ்வரன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**கடந்த 2013 - 2018 ஆம் ஆண்டு வரையில் வடக்கு மாகாண சபை நிதியைப் பயன்படுத்தாமல் மத்திய அரசுக்கு திருப்பியனுப்பியதாக தொடர்ச்சியாகக் கூறிவரும் பொய்ப்பிரசாரத்தை சம்பந்தப்பட்ட தரப்பினர் நிறுத்த வேண்டும் என வடக்கு மாகாணத்தின் முன்னாள் கல்வியமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.**



2013 புரட்டாதி மாதம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை 2018 புரட்டாதி வரை செயற்பட்ட காலத்தில் வடக்கு மாகாண சபைக்கென மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி செலவு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டதாக தொடர்ச்சியாக பொய்யான பிரசாரம் ஒன்றை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில அமைச்சர்கள் மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உட்பட பிராந்திய விவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோர் முன்னெடுத்து வருகின்றனர்.

இதனை மறுக்கும் முகமாக அண்மையில் ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையில் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

உண்மையான தகவல்களையும் தரவுகளையும் இவ்வறிக்கை ஊடாக முன்வைப்பதன் மூலம் இப்பொய்ப்பிரசாரத்தை மக்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

வடக்கு மாகாணத்துக்கான நிதியானது இரண்டு நிறுவனங்களூடாக மத்திய அரசு அனுப்புகிறது. ஒன்று மாகாண சபை, மற்றையது மத்திய அரசால் பல்வேறு அமைச்சர்களின் திட்டங்களை நடைமுறைப்படுத்த மாவட்ட செயலாளர்களூடாக (கச்சேரி) அனுப்பப்பட்டு செலவிடப்படும் நிதி.

ஆனால் வடக்குக்கு அனுப்பப்பட்ட நிதி என்றவுடன் மக்கள் மாகாண சபைக்கு அனுப்பப்பட்ட நிதியாகவே விளங்கிக் கொள்கின்றமை தவறாகும். மாகாண சபைக்கு அனுப்பப்பட்ட நிதிக்கு மட்டுமே மாகாண சபை பொறுப்பாகும், அந்த நிதி தொடர்பாகவே மாகாண சபை பதிலளிக்க முடியும்.

மாவட்ட கச்சேரிகளூடாக மத்திய அரசாங்கம் செலவு செய்த நிதிகளுக்கு மாவட்ட அரசாங்க அதிபர்களே பதிலளிக்க வேண்டும். ஏனெனில் இந்த நிதிக்கும் மாகாண சபைக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.

மாகாண சபைக்கு மத்திய அரசு ஒதுக்குகின்ற நிதியை பரந்த அளவில் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1.மீண்டெழும் செலவீனம் **(recurrent expenditure)**

2.பிரமாண அடிப்படையிலான நன்கொடை **(Criteria Based Grant)**

3.மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை **(Provincial Specific Development Grant)**

இதில் மீண்டெழும் செலவீனம் என்பது மாகாண சபை ஊழியர் சம்பளங்கள், கொடுப்பனவுகள் உள்ளிட்ட நிர்வாக செலவீனங்களைக்குறிக்கும். இந்த நிதி தொடர்பாக விமர்சனங்கள் எதுவும் கிடையாது.

பிரமாண அடிப்படையிலான நன்கொடை என்பது மாகாண அமைச்சுகளின் மேம்பாட்டுக்கான (தளபாடங்கள், கணனிகள், வாகனங்கள் உள்ளிட்டவை கொள்வனவு செய்தல்) நிதியும் மாகாண சபை உறுப்பினர்களுக்கான தொகுதி அபிவிருத்திக்கான வருடாந்த ஒதுக்கீடும் இதில் அடங்கும்.

உண்மை நிலை என்னவெனில் அபிவிருத்திக்காக மாகாண சபை கோரிய நிதியில் 20 - 40 வீதமே மத்திய அரசால் அனுமதிக்கப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட தொகையைவைத்தே நாம் வரவு- செலவுத்திட்டத்தைத் தயாரிக்கின்றோம். ஆனால் அனுமதிக்கப்படும் தொகை கூட முழுமையாகவும் உரிய காலத்திலும் வழங்கப்படுவதில்லை. சில வேளைகளில் குறித்த ஆண்டில் அனுமதிக்கப்பட்ட நிதி அடுத்த ஆண்டில் கூட வழங்கப்பட்டுள்ளது.

இதில் அனுமதிக்கப்பட்ட தொகை என்பது மத்திய அரசாங்கம் மாகாணத்துக்கு வழங்குவதற்கு ஒத்துக் கொண்ட தொகையாகும். வழங்கப்பட்ட தொகை என்பது ஒத்துக் கொள்ளப்பட்ட தொகையில் காசாக வழங்கப்பட்ட தொகையாகும்.

அனுமதிக்கப்பட்ட தொகையை நம்பி நாம் திட்டங்களை ஆரம்பிக்கின்ற பொழுதும் குறித்த ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்ட தொகையைவிட குறைவாகவும் மிகக்காலம் தாழ்த்தியும் நிதி வழங்கப்படுவதனால் அபிவிருத்தித் திட்டங்களின் தாமதத்திற்கு மத்திய அரசின் மேற்கண்ட வகையிலான செயற்பாடுகளே காரணமாகும்.

மேற்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டபடி வழங்கப்பட்ட தொகைக்கு மேலாக செலவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ஆனால் வழங்கி முடிக்காத குறைநிதி என்பது மாகாண சபையின் அபிவிருத்தி செலவீன பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு அடுத்தடுத்த ஆண்டுகளிலேயே பெறப்படுகின்றது.

இம் மேலதிகமாக செலவு செய்யப்பட்ட நிதியானது ஆண்டுதோறும் மாகாண சபை செலவீனங்களில் இருந்து மிச்சம் பிடிக்கப்பட்டு சேமிக்கப்படும் மாகாண நிதியிலிருந்து பயன்படுத்தப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் மட்டும் அவ்வாண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு 22 மில்லியன் செலவு செய்யப் படவில்லை. எனினும் இந்நிதி திருப்பி அனுப்பப்படவுமில்லை. மத்திய அரசு மிக காலம் தாழ்த்தி வழங்கியதாலேயே இந்நிதி குறித்த திகதிக்குள் செலவு செய்யப்படவில்லை. மாறாக அடுத்த ஆண்டு முற்பகுதிக்குள் அது முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது.

எனவே, அனுப்பப்பட்ட நிதி செலவழிக்கப்படவில்லை என்பது 100 வீதம் பொய்யான தகவல் மட்டுமன்றி அந்தந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட தொகையை விட அதிகமான தொகை செலவு செய்யப்பட்டுள்ளமையே உண்மையாகும். அனுமதிக்கப்பட்ட தொகையை விட குறைவான நிதியையும் அதனை தாமதமாகவும் வழங்குவதன் மூலமும் அபிவிருத்தி வேலைகளை தாமதப்படுத்துவது மத்திய அரசே.

இலங்கையின் மத்திய, மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஆகியவற்றின் நிதி முகாமைத்துவம் மற்றும் நிதி நிர்வாகம் ஆகியவற்றை மதிப்பீடு செய்து உயர்ந்த மட்டத்திலான செயற்பாட்டை வெளிப்படுத்திய நிறுவனங்களுக்கு வெற்றிப்பதக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பொதுக் கணக்குகளை மதிப்பீடு செய்வதற்கான இலங்கை பாராளுமன்ற குழுவே இதனை மேற்கொள்கிறது. 2015 - 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடக்கு மாகாண சபை பெருமளவு பதக்கங்களை பெற்றிருந்தது. வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என 32 மாகாண சபை நிறுவனங்கள் இதில் பங்குபற்றியிருந்தன.

மேற்கண்ட பட்டியலானது 2015 ஆம் ஆண்டு தவிர அடுத்து வரும் ஆண்டுகளில் வடக்கு மாகாண சபையானது ஏனைய மத்திய மாநில அமைச்சுக்கள் திணைக்களங்களை விட அதிகரித்த விகிதாசாரத்தில் விருதுகளைப் பெற்றுள்ளமையை வெளிப்படுத்துகினறது. 2018 ஆம் ஆண்டில் வடக்கு மாகாண சபையின் 32 நிறுவனங்களில் 31 நிறுவனங்கள் விருதுகளைப் (பதக்கங்கள்) பெற்றுக் கொண்டது.

ஏனைய மத்திய மாகாண அமைச்சுக்கள் திணைக்களங்களை ஒப்பிடுகையில் வடக்கு மாகாண சபையின் நிதி முகாமைத்துவம் சிறப்பாக அல்லது வெகு சிறப்பாக இருப்பதனையே மேற்கண்ட தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

உண்மை நிலை இவ்வாறு இருக்கையில் பல்வேறு அரச தலைவர்களும்வடக்கு மாகாண சபைக்கு நிர்வாகம் நடத்த தெரியாது என்றும் வினைத்திறன் அற்றது என்றும் பாராளுமன்றத்திலும் வெளியிலும் தொடர்ச்சியாக பேசிவருவதானது மாகாண சபை முறையை ஒழிக்கின்ற உள்நோக்கத்துடன் மேற்கொண்டு வருகின்ற பிரசாரம் ஆகும்.

எனவே வடக்கு மாகாண சபை நிதியைப் பயன்படுத்தாமல் திருப்பி அனுப்பியதாக தொடரும் பிரசாரத்தை சம்பந்தப்பட்ட தரப்பினர் நிறுத்த வேண்டும் என்பதுடன் இத்தகைய சதி நோக்கம் கொண்ட பிரசாரத்தை கணக்கில் எடுக்க வேண்டாம் என மக்களை கேட்டுக் கொள்கின்றோம். (ஜ-4)

நிதி நிர்வாகம் மற்றும் நிதி முகாமைத்துவத்திற்கான சுருக்கமான விருதுகள் பட்டியலை கீழே காணலாம்.


| | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| உச்ச அடைவு மட்டத்தை வெளிப்படுத்திய வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் திணைக்களங்களுக்கான பதக்கங்கள் | 7 | 15 | 12 | 31 |
| அகில இலங்கை ரீதியில் உச்ச அடைவு மட்டத்தை வெளிப்படுத்திய மத்திய மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் பெற்ற பதக்கங்கள் | 81 | 107 | 109 | 110 |
| அகில இலங்கை ரீதியில் பங்குபற்றிய மத்திய மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் எண்ணிக்கை | 831 | 837 | 838 | 844 |

**இவ்வகையில் 2013 - 2018 ஆம் ஆண்டு வரை நாம் கோரிய தொகையும் அனுமதிக்கப்பட்ட தொகையையும் அனுமதிக்கப்பட்ட, வழங்கப்பட்ட மற்றும் செலவு செய்யப்பட்ட நிதி தொடர் பான விபரங்களை கீழே காணலாம்.**

| வருடம் | மாகாண அரசு கோரிய தொகை (மில்லியன் ரூபாவில்) | மத்திய அரசு அனுமதித்த தொகை (மில்லியன் ரூபாவில்) | | அனுமதிக்கப்பட்ட தொகையில் வழங்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாவில்) | | செலவு செய்யப்பட்ட தொகை (மில்லியன் ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|
| | | | வீதம் | | வீதம் | |
| 2013 | 4738.50 | 1030.00 | 21.73% | 618.00 | 60% | 850.58 |
| 2014 | 5374.80 | 1035.00 | 19.25% | 908.00 | 87.72% | 1023.78 |
| 2015 | 6977.20 | 1440.00 | 20.41% | 1440.00 | 100% | 1418.59 |
| 2016 | 7978.03 | 3238.30 | 40.59% | 1800.00 | 55.58% | 2311.04 |
| 2017 | 10672.48 | 4127.78 | 38.67% | 3620.50 | 87.71% | 3634.33 |
| 2018 | 10310.10 | 3081.87 | 29.89% | 1828.28 | 59.32% | 1841.83 |

# பாரதம்

## ஒரு நிமிடத்தில் இரு கைகளால் எழுதி சாதனை படைத்த மாணவி



(டில்லி)

மங்களூருவில், ஒரு நிமிடத்தில் இரு கைகளால் 45 வார்த்தைகளை எழுதி மாணவி உலக சாதனை படைத்து உள்ளார். அவரது இந்த சாதனைக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.


பொதுவாக மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு திறமை இருக்கும். அதுபோல மங்களூருவை சேர்ந்த 17 வயது மாணவி இரு கைகளாலும் ஒரே நேரத்தில் எழுதும் திறமை உள்ளது.

ஒரு நிமிடத்தில் இரு கைகளால் 25 வார்த்தைகள் எழுதியதே இதற்கு முன்பு உலக சாதனையாக இருந்தது.

அந்தச் சாதனையை தற்போது ஆதிஸ்ரூபா தகர்த்து உலக சாதனை படைத்து உள்ளார் என்று கல்வி நிறுவனம் அறிவித்து உள்ளது.

இதற்கிடையே ஆதிஸ்ரூபா இரு கைகளை பயன்படுத்தி எழுதும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளது.

அந்த வீடியோவை பார்த்தவர்கள் ஆதிஸ்ரூபாவுக்கு பாராட்டுகள் தெரிவித்து வருகின்றனர். (2)



**861 கோடி ரூபாய்க்கு புதிய பாராளுமன்ற கட்டடம் கட்டுவத**
**உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்ற பெருமைக்குரிய**
**வேண்டும், மக்கள் தொகைக்கு ஏற்ப எம்.பிக்களின் எண்ணிக்**
**காலமாக எழுந்து வருகிறது. தற்போதுள்ள பாராளுமன்ற கட்**

## குடியரசாக பிரகடனம் செய்யவுள்ள பார்படோஸ்



(ப்ரிட்ஜ்டவுன்)

பார்படோஸ் அடுத்த வருடம் குடியரசு நாடாகப் பிரகடனம் செய்யப் போவதாக அறிவித்துள்ளது. இதன் காரணமாக நாட்டின் அரச தலைவர் பதவியிலிருந்தும் இரண்டாம் எலிசபெத் மகாராணி விலகவுள்ளதாகவும் பார்படோஸ் அரசு அறிவித்துள்ளது. இதன்மூலம் சுமார் மூன்று தசாப்தங்கள் பிரித்தானிய முடியாட்சியின் கீழிலிருந்து விடுதலை பெறும் நாடாக தற்போது பார்படோஸ் உள்ளது.

"காலனித்துவ ஆட்சியிலிருந்து முழுமையாக விடுதலை பெறும் நேரம் வந்து விட்டது" என கரீபியன் நாட்டின் ஆளுநர் நாயகம் செவ்வாயன்று ஆற்றிய உரையொன்றில் தெரிவித்தார். இரண்டாம் எலிசபெத் மகாராணி ஐக்கிய இராச்சியம் உட்பட முன்னர் பிரிட்டிஸ் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த 15 நாடுகளின் தலைவராக தற்போதும் உள்ளார்.

அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, ஜமேக்கா, கரீபியன் மற்றும் இந்தியப் பெருங்கடலில் உள்ள பல தீவு நாடுகள் உள்ளிட்டவை இதில் அடங்கும். எனினும் பார்படோஸ் மக்கள் அவரது அந்தஸ்தை நீக்க நீண்டகாலமாக கிளர்ந்தெழுந்தனர் - அதனுடன், அதன் ஆளுகை மீது ஏகாதிபத்தியத்தின் நீடித்த அடையாளமாக அவர் உள்ளார் என்றும் கூறி வந்ததுடன் இந்த நூற்றாண்டில் பல்வேறு தலைவர்கள் நாடு ஒரு குடியரசாக மாற வேண்டும் என்று முன்மொழிந்தனர்.


அத்துடன் பார்படோஸ் மக்கள் ஒரு பார்பேடிய நாட்டுத் தலைவரை விரும்புகிறார்கள், இதன்மூலம் தமது அடையாளம் வெளிப்படுத்தப்படும். மேலும் பார்படோஸ் முழு இறையாண்மையை நோக்கி நகரவுள்ளது. அந்த வகையில் பார்படோஸ் 55 ஆவது சுதந்திர ஆண்டு விழாவைக் கொண்டாடும் நேரத்தில் குடியரசாக மாறும் என்றும் ஜெனரல் சாண்ட்ரா மேசன் தெரிவித்தார். இந்த பார்படோஸ் கரீபியக்கடலுக்கு கிழக்குத்திசையில் அந்திலாந்திக் மாக்கடலில் அமைந்துள்ள ஒரு தீவாகும். (2)

## உலகளவில் கொரோனா
## எண்ணிக்கை மூன்று கே

(ஜெனீவா)

**உலகளவில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 கோடியைக் கடந்துள்ளது. நேற்று முன்தினம் இந்த தொற்று காரணமாக 3 இலட்சத்து 7 ஆயிரத்து 465 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

## அமெரிக்காவைத் தாக்கிய



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தின் பென்ச கோலோ வளைகுடா கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் காலை, இரண்டாம் எண் நிலை சாலி சூறாவளி தாக்கியது.

சாலி சூறாவளி மரங்களை வேரோடு பிடுங்கியெறிந்ததுடன் தெருக்களில் வெள்ளம் மற்றும் நூறாயிரக் கணக்கான வீடுகள் மற்றும் வணிக ஸ்தலங்க
மின்சார செயலிழப்புக்கும் காரணமாக அமைந்து

இரண்டாம் எண் நிலை சாலி சூறாவளி நிலச்சரி
படுத்திய பின்னர் பலவீனமடைந்தது. எனினும் அ
ர்வு புளோரிடாவையும் அலபாமாவையும் தொடர்ந்
யுள்ளது.

# வெளிநாடு






டுவதற்கான ஒப்பந்தத்தை டாடா நிறுவனம் கைப்பற்றியுள்ளது
குரிய இந்தியாவில் பாராளுமன்றத்துக்கு புதிய கட்டடம் கட்ட
ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் நீண்ட
ற கட்டடம் 1927 ஆம் ஆண்டு கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# 40 ஆண்டு பழைமையான டி.என்.ஏ.யிலிருந்து குளோனிங் முறையில் பிறந்த குதிரை

(வோஷிங்டன்)

குதிரை இனம் அழிந்து வருவதால் அதை காப்பாற்றும் முயற்சியில் 40 ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட குதிரையின் டி.என்.ஏ.யில் இருந்து குளோனிங் முறையில் குதிரையை உருவாக்கி உள்ளனர். அமெரிக்காவில் ப்ரெஸ் வால்ஸ்கியின் என்ற குதிரை இனம் குளோனிங் மூலம் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டுள்ளது.



இந்த குதிரை இனம் அழிந்து வருவதால் அதை காப்பாற்றும் முயற்சியில் 40 ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட குதிரையின் டி.என்.ஏ.யில் இருந்து குளோனிங் முறையில் குதிரையை உருவாக்கி உள்ளனர்.

இது குறித்து அமெரிக்காவின் சாண்டியாகோ மிருகக்காட்சிசாலை அதிகாரிகள் கூறும்போது, மிருகக்காட்சிசாலையில் குளோனிங் முறையில் பிறந்த முதல் குதிரை இதுவாகும். இதற்கு "கர்ட்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு மிருகக்காட்சிசாலையில் உறைந்த நிலையில் சேகரிக்கப்பட்ட ஒரு செல்லில் இருந்து இந்த குதிரை குளோனிங் மூலம் உருவாக்கப்பட்டது. கர்ட் குதிரை இப்போது ஆரோக்கியமாகவும் செழிப்பாகவும் இருக்கிறது என்றனர்.

முதலில் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் காணப்பட்ட இந்த குதிரை மனித வளர்ச்சி மற்றும் விரிவடைந்த வாழ்விடங்கள் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. (2)

# ...ா தொற்றாளர்கள் ...காடியை கடந்தது

இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 கோடியே 30 ஆயிரத்து 911ஆக பதிவாகியுள்ளது.

இதேநேரம் இந்த வைரஸ் தொற்று காரணமாக நேற்று முன்தினம் 6 ஆயிரத்து 220 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 9 இலட்சத்து 44 ஆயிரத்து 707 ஆக அதிகரித்துள்ளது. (2)

# கொரோனா வைரஸ் இறப்பு எண்ணிக்கை பற்றி ஆராய்ந்த ஊடகவியலாளர்கள் கைது

(வுஹான்)

கொரோனா வைரஸ் பிறப்பிடமான சீனா - வுஹான் நகரில் பதிவான உண்மையான கொரோனா வைரஸ் இறப்பு எண்ணிக்கை குறித்து ஆய்வு செய்த அந்நாட்டு ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகச் செயற்பாட்டாளர்கள் 4 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் கைது செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்கும்மேலாகியும், அவர்களைப் பற்றிய எந்தவொரு தகவல்களும் இதுவரை இல்லை என அங்குள்ள வெளி நாட்டுச் செய்தியாளர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் 2012 இல் ஆட்சிக்கு வந்ததிலிருந்து அங்கு ஊடக சுதந்திரம் முன்னெப்போதும் இல்லாத வகையில் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

அரசின் தணிக்கை, பொலிஸாரின் அச்சுறுத்தல்கள் மற்றும் சில சமயங்களில் சிறைத் தண்டனை என ஊடகவியலாளர்கள்மீது அங்கு அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

சில சுயாதீன ஊடகவியலாளர்கள் வெளிநாட்டு அல்லது தனியார் ஊடகங் களுக்குப் பணியாற்ற முடியாது தடுக்கப்பட்டுள்ளனர் எனவும் அங்குள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (2)

# ...ய 'சாலி' சூறாவளி




...ங்களுக்கான
...மந்துள்ளது.
...லச்சரிவை ஏற்
...றும் அதன் நக
...டர்ந்து தாக்கி

இதனால் ஒருவர் உயிரிழந்ததுடன் நூற்றுக்கணக்கானவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மீட்கப்பட்டனர். இதேவேளை புளோரிடா பன்ஹான்டில் மற்றும் தெற்கு அலபாமாவின் சில பகுதிகளில் பேரழிவு மற்றும் உயிருக்கு ஆபத்தான வெள்ளம் தொடர்வதாக தேசிய சூறாவளி மையம் தெரிவித்துள்ளது. (2)

# கொத்துக் கொத்தாக செத்து விழும் பறவைகளால் பரபரப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் - நியூ மெக்ஸிகோவில் பல வகை இனப் பறவைகள் சமீபத்திய வாரங்களில் கொத்துக்-கொத்தாக பல ஆயிரக்கணக்கில் செத்து விழும் சம்பவங்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.



பறவைகள் செத்து விழும் சம்பவங்கள் குறித்து நியூ மெக்ஸிகோ மாகாண பல்கலைக்கழகத்தின் மீன், வனவிலங்கு மற்றும் சூழலியல் பாதுகாப்பு துறையின் ஆராய்ச்சியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது மிகவும் கொடூரமானது என நியூ மெக்ஸிகோ மாகாண பல்கலைக்கழகத்தின் உயிரியலாளர் மார்தா டெஸ்மண்ட் தெரிவித்துள்ளார்.

இது மிகப் பெரிய துயரம். நூறாயிரக்கணக்கான மற்றும் மில்லியன்கணக்கான பறவைகள் இறந்துள்ளன என அவர் கூறியுள்ளார்.

பறவைகளின் இறப்புக்குக் காட்டுத் தீ, அதனால் ஏற்பட்டுள்ள புகை மண்டலம் காரணமா? என்பது குறித்துச் சரியாகத் தெரியவில்லை. இது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என ஒரேகான் மீன் மற்றும் வனவிலங்கு துறையின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வருடந்தோறும் குளிர்காலத்தில் தென்மேற்கு அமெரிக்கப் பகுதிகளை நோக்கிப் பல ஆயிரக்கணக்கான வெளிநாட்டுப் பறவைகள் படையெடுப்பது வழக்கம். ஆனால் இம்முறை பெரும்பாலும் பறவைகளின் வருகை இருக்காது எனவும் உயிரியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (2)

# தனிமனித அதிகாரம் ஜனநாயகத்திற்கு ஆபத்து

## எச்சரிக்கின்றார் முஜிபுர்

(கொழும்பு)

**ஜனாதிபதி முறைமை நாட்டுக்குப் பொருத்தமானதல்ல. அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கும் போது ஜனாதிபதிக்கு ஏன் அதிக அதிகாரங்களை வழங்குகின்றனர். ஒரு தனிமனிதனுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்படுவது ஜனநாயகத்துக்கு ஆபத்து என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எச்சரித்துள்ளார்.**



எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

19 ஆம் திருத்தத்தில் சிக்கல்கள் இருந்தால் அவற்றை திருத்திக் கொள்வதற்கு நாம் ஆதரவை வழங்குவதற்கு தயாராகவே இருக்கின்றோம்.

அரசாங்கத்துக்கு 2/3 பெரும்பான்மை இருக்கும் போது ஏன் 20 ஆம் திருத்தத்தை கொண்டு வந்து தனிமனிதருக்கு அதிகாரங்களை வழங்குகின்றார்கள். அதன் மூலம் எமது நாடு பின்னோக்கி செல்கின்றது.

ஒரு தனிமனிதனுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்படுவது ஜனநாயகத்துக்கு ஆபத்து. ஜனநாயகத்துக்கு எதிரானதை மேற்கொள்ள வேண்டாமென கூறுகின்றோம்.

கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்கு மகிந்த ராஜபக்ஷ பாதயாத்திரை சென்றிருந்தார். அப்போது ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பது தொடர்பிலான கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தார். 1994 ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க ஜனாதிபதியாக வந்ததும் அதிகாரங்களை குறைப்பதாக கூறியிருந்தார்.

2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்து ஜே.வி.பியுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும்போது ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கு இணங்கியிருந்தார்.

மைத்திரிபால சிறிசேன தனது கொள்கை விளக்க உரையிலேயே ஜனாதிபதி முறை நீக்கம் தொடர்பில் தெரிவித்து ஆட்சிக்கு வந்திருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதியை விட இலங்கை ஜனாதிபதிக்கு அதிகாரம் அதிகமாகும். இதனாலேயே 19 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அத்திருத்தத்தை சகலரும் ஏற்றுக் கொண்டார்கள். 224 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்கினார்கள்.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பாராளுமன்றுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டது. அரசியலமைப்பு நிர்ணய சபை, சுயாதீன ஆணைக்குழுக்கள் போன்றனவும் உருவாக்கப்பட்டன.

ஆனால் மீண்டும் அதிகாரங்களை பறிக்கும் வகையில் 20 ஆவது திருத்தம் அமைந்துள்ளது. இதுவொரு அவசர திருத்தச் சட்டமாகும்.

19 ஆவது திருத்தச் சட்டத்தை ஓரமாக்கி 20 ஆவது திருத்தம் கொண்டு வரப்படுமாயின் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதுடன் அதனை தோற்கடிப்பதற்கு முயற்சி எடுப்போம் எனத் தெரிவித்தார். (2-7)

# விசா மோசடியில் ஈடுபட்ட ஊழியர் குழு பணி நீக்கம்

(கொழும்பு)

விசா மோசடியில் ஈடுபட்ட ஊழியர் குழுவொன்றை பணி இடைநீக்கம் செய்துள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த குற்றச்சாட்டுக்கு உட்பட்ட நான்கு இலங்கை ஊழியர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாண்டு ஜூலை மாதத்திலிருந்து குறித்த ஊழியர்களின் சேவையை விமான நிறுவனம் நிறுத்தியுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போது விமான சேவையின் எந்தவொரு நடவடிக்கையிலும் ஊழியர்கள் ஈடுபடவில்லை எனவும் இது தொடர்பாக சட்ட அமுலாக்க நிறுவனங்களுடன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஒத்துழைப்பு வழங்கிவருவதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பதவியும் பண்பும்

என்னுடன் படித்த ஒருத்தர் ஒருநாள் மிகக் கவலையோடு வந்தார். என்ன விடயம் என்று விசாரித்தேன். அவர் சொன்னார்.சின்ன வயதிலே எங்களுடன் படித்த ஒருத்தன் இப்பொழுது ஒரு பெரிய பதவியிலே இருக்கின்றான்.சும்மா அவனைப் பார்த்து வாழ்த்து சொல்லி விட்டு வரலாம் என்று போனேன்.

அவன் சரியாக முகம் கொடுத்துக் கூட பேசவில்லை...ஏதோ ஒரு அற்பப் புழுவைப் பார்க்கிறது மாதிரி என்னைப் பார்த்தான். நான் போட்டிருக்கின்ற இந்த சாதாரண சட்டை கூட அவனுடைய கௌரவத்திற்கு இடைஞ்சல் என்பது மாதிரி என்னிடம் பழகினான். அது தான் மனது ஒரு மாதிரியாக ஆகிவிட்டது... உன்னிடம் வந்தேன் என்றார்.

“கவலைப்படாதீர்கள்...இன்றைக்குப் பலபேர் அப்படித்தான் ஆகிவிட்டார்கள்.பதவி பெருகப் பெருக பண்பு குறைந்துவிட்டது. இடம் உயர உயர இதயம் குறுகிப் போய்விட்டது. இதயம் விசாலமானவர்களை இதிகாசங்களிலே தான் பார்க்க முடிகின்றது” என்றேன்.

“ என்ன அப்படி சொல்கின்றீர்கள் ?” என்றார்.

“ ஆமாங்க.. என்று சொல்லி அவரை உட்கார வைத்து குசேலர், கண்ணனைப் பார்க்கப் போன கதையைச் சொன்னேன்.”

குசேலர் கிருஷ்ணனைப் பார்க்கிறதற்காகப் போகின்றார்.அவர் அவல் கொண்டு போகின்றார்.ஒரு பழைய துணி மூட்டையிலே அதைக் கட்டி எடுத்துக் கொண்டு போகின்றார்.

கிருஷ்ணன் அந்த அவல் மூட்டையை வாங்கிப் பிரிக்கின்றார். குசேலர் அதைப் பார்க்கிறார். அவர் மனசு மிகவும் சங்கடப்படுகின்றது. “ நான் எங்கே? கிருஷ்ணன் எங்கே? நான் ஏழை வறியவன்! கிருஷ்ணனோ பேரரசன்..இறைவன் .என்னுடைய அழுக்கான துணியை அவர் கையாலே தொடலாமா? ”இப்படியெல்லாம் நினைக்கின்றார்.

ஆனால் கிருஷ்ணன் அவர் பாட்டுக்கு மூட்டையைப் பிரித்தார். அவலை எடுத்தார்... வாயிலே போட்டார். அசைபோட ஆரம்பித்து விட்டார்.

கொஞ்ச நேரம் ஆகிவிட்டது. அவல் இன்னும் கொஞ்சம் மீதி இருந்தது. மூன்றாவது பிடி அவலை வாயிலே போடப் போனார்.

அந்த சமயம் பார்த்து ருக்மணி ஓடிவந்து கிருஷ்ணனின் கையைப் பிடித்துக் கொண்டதும் மிகவும் ஆச்சரியமாகிப் போய்விட்டது.

நாம் கொண்டு வந்த இந்த அவலைக் கிருஷ்ணன் சாப்பிடுவது ருக்மணிக்குப் பிடிக்கவில்லை போல இருக்கின்றது என்று நினைத்தார் குசேலர்.

ஆனால் கிருஷ்ணனுக்கு ருக்மணியின் இதயம் புரிந்தது. ருக்மணிக்கும் கிருஷ்ணனின் இதயம் புரிந்தது. குசேலர் ருக்மணியைப் புரிந்து கொள்ள வேண்டுமே என்பதற்காக கிருஷ்ணன் பேச ஆரம்பித்தார்.ருக்மணியைப் பார்த்துச் சொல்கின்றார்.

“ எதற்காக நீ என் கையைத் தடுத்து நிறுத்தினாய்? நான் குசேலனின் சேவகன். அவர் கொண்டு வந்த அவலை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும் ” என்றார்.

இதற்கு ருக்மணி சொன்ன பதில் என்ன தெரியுமா?

“ கிருஸ்ணா... நீ குசேலருக்குத் தொண்டன். நான் உனக்குத் தொண்டு செய்பவள். அந்த உரிமை காரணமாக எனக்கு இந்த அவலில் பங்கு வேண்டாமா? எனக்குள்ள பங்கை நான் கேட்கின்றேன்” இது தான் ருக்மணியின் பதில்.

ஆன்மீக எண்ணங்கள் எல்லாம் எந்த அளவுக்கு விசாலத்தன்மை வாய்ந்தவைஎன்பதை நாம் புரிந்து கொள்வதற்காக சான்றோர்கள் இந்தச் சம்பவத்தை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். பதவி உயரும்போது பண்பும் உயர வேண்டும். பழைய நட்புக்களை மறந்துவிடக் கூடாது.

இந்தக் காலத்திலே சாதாரண உயர்வையே மிகப் பெருமையாக நினைக்கிறவர்களும் உண்டு.ஒருவர் சொன்னார். “ நான் கடந்த ஒரு மாத காலத்திலே வாழ்க்கையிலே மிகவும் உயர்ந்திருக்கின்றேன்” என்றார். “எப்படிங்க அது? ” என்றேன்.“ போன மாதம் காலிலே அடிபட்டு மருத்துவமனையில் சேர்ந்தேன். அப்பொழுது மூன்றாவது மாடியிலே படுத்திருந்தேன். இப்பொழுது ஏழாவது மாடிக்கு மாற்றியிருக்கின்றார்கள் ” என்றார்.

# “சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளில் தளர்வு ஏற்பட்டுள்ளது”

## பாடசாலைகளை எச்சரிக்கும் கல்வி அமைச்சு




**(கொழும்பு)**

**கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாப்புப்பெற சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டி சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைத் தொடர்ந்தும் முழுமையாக கடைப்பிடித்து பாடசாலை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.**

சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கை வழிமுறைகளை பின்பற்றுவதை ஒருசில பாடசாலைகள் தவிர்த்து வருவது தொடர்பில் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதையடுத்து, கல்வி அமைச்சு இந்த அறிவிப்பை சகல பாடசாலைகளுக்கும் விடுத்திருக்கின்றது.

கல்வி அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் தற்போது அனைத்து மாணவர்களுக்கும் திறக்கப்பட்டிருக்கின்றன.

அதனால் சுகாதார அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் வழிகாட்டல்கள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைத் தொடர்ந்தும் அவ்வாறே கடைப்பிடித்து வரவேண்டும்.

இதுதொடர்பாக பாடசாலைகளுக்கு ஏற்கனவே அறிவித்திருக்கின்றோம்.

என்றாலும் பாடசாலை வளாகத்துக்குள் தொற்று நீக்கல், முகக்கவசம் அணிதல், கைகழுவுதல், சமூக இடைவெளியை பேணுதல் உட்பட கொரோனாவைக் கட்டுப்படுத்தும் ஆலோசனைகள் தொடர்பில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் உட்பட அனைத்து பாடசாலை சமூகமும் தற்போது கவனக்குறைவாகச் செயற்படுவதாக ஒருசில பாடசாலைகள் தொடர்பில் எமக்கு தகவல் கிடைத்திருக்கின்றது.

அதனால் குறிப்பாகப் பாடசாலைப் போக்குவரத்துச்சேவை வழங்குதல், சிற்றுண்டிச்சாலைகளை மேற்கொண்டு செல்லுதல் உட்பட பாடசாலை மாணவர்கள் நேரடியாக சமூகத்துடன் ஒன்றுசேரும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவர்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சமூகப்பொறுப்பு பாடசாலை பொறுப்பதிகாரிகள் உட்பட பாடசாலைச் சமூகத்துக்கு இருக்கின்றது.

பிள்ளைகளின் நோய் நிலைமைகளின்போது அதுதொடர்பில் கூடுதல் கவனம்செலுத்தி, அவர்களின் சுகாதாரப் பாதுகாப்புத் தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும்.

மேலும் கொவிட் இரண்டாவது அலை தொடர்பான அச்சுறுத்தல், இதுவரை நாட்டில் இருந்து நீங்கவில்லை எனவும் ஒருவேளை, அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் அதனால் அதிகம் பாதிக்கப்படுவது பாடசாலை பிள்ளைகளாகும்.

அதனால் சுகாதார வழிகாட்டல்களை கடைப்பிடிப்பதில் அசமந்தப்போக்கை விட்டு, தொடர்ந்தும் சுகாதார பாதுகாப்பைப் பேணிவருவதை உறுதிப்படுத்துவது ஒவ்வொரு தனிநபரின் கடமையாக உணர்ந்து மேற்கொள்ளவேண்டும் என கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (2-7)

# தற்கொலைக் குண்டுதாரியின் வீட்டை கையகப்படுத்த முயற்சி



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினமான கடந்த 2019 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல்களில், சினமன்கிராண்ட் ஹோட்டலில் குண்டினை வெடிக்கச் செய்த இன்சாப் அஹமட் எனும் குண்டுதாரியின் வீட்டை, போலி உறுதிப்பத்திரங்களைத் தயாரித்து கையகப்படுத்த முயன்றதாக கூறப்படும் 5 சந்தேக நபர்களை கைதுசெய்து தடுத்து வைத்து விசாரித்து வருவதாக சி.ஐ.டி.நேற்று முன்தினம் கோட்டை நீதவான் நீதிமன்றுக்கு அறிவித்தது.

சினமன் கிராண்ட் நட்சத்திர ஹோட்டலில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் குறித்து இடம்பெறும் விசாரணைகள் தொடர்பிலான நீதவான் நீதிமன்ற விசாரணை நடவடிக்கைகள், நேற்று முன்தினம் கோட்டை பதில்நீதவானும்கொழும்பு மேலதிக நீதவான் சலனி பெரேரா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது, சி.ஐ.டி எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட விசாரணைப் பிரிவு அறை இலக்கம் 3 இன் பொறுப்பதிகாரி, பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர் தீபானி மெனிகே மேலதிக விசாரணை அறிக்கையுடன் மன்றில் ஆஜரானார்.

“இந்தச் சினமன்கிராண்ட் ஹோட்டல் தாக்குதல் தொடர்பில் இதுவரை 4 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளோம். அவர்களிடம்பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்நிலையில் குறித்த ஹோட்டலில் தற்கொலை தாக்குதலை நடத்திய குண்டுதாரியான இன்சாப் அஹமட் வசித்த வீட்டில் சந்தேகத்துக்கு இடமான முறையில் சிலர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக சி.ஐ.டிக்குத் தகவல் கிடைத்தது.

அது தொடர்பில் நாம் 5 சந்தேக நபர்களைக் கைது செய்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரித்து வருகின்றோம்.

மேலதிக விசாரணைகளில், குண்டுதாரியான இன்சாப் அஹமட்டின் வீட்டைப் போலி உறுதிகளைத் தயாரித்துக் கையகப்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம்என பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர் தீபானி மெனிகே தெரிவித்தார்.

இந் நிலையில் இந்த விவகாரம் தொடர்பிலான வழக்கு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (2-7)

# நொதேன் பிறீமியர் லீக் - 2K20 கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டிகள்



- ஊரெழு றோயல்ஸ் எதிர் சாவா ஸ்பாட்டன்ஸ்.
- சாவா ஸ்பாட்டன்ஸ் - 46/6.
- ஊரெழு றோயல்ஸ் - 51/6.
- ஊரெழு றோயல்ஸ் 4 விக்கெட்டுக்களால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - அருண் 2 விக்கெட்டுக்கள்.



- நோர்த் சுப்பீரியர்ஸ் எதிர் சங்கானை ரொப் 11.
- சங்கானை ரொப் 11 - 50/10.
- நோர்த் சுப்பீரியர்ஸ் - 52/5.
- நோர்த் சுப்பீரியர்ஸ் 5 விக் கெட்டுகள் வெற்றி.
- ஆட்ட நாயகன் - சிவதீபன் 5 விக்கெட்டுக்கள்.



- நோர்த் சுப்பீரியர்ஸ் எதிர் ஜப்னா றோயல்ஸ்.
- ஜப்னா றோயல்ஸ் - 89/6.
- நோர்த் சுப்பீரியர்ஸ் - 92/3.
- நோர்த் சுப்பீரியர்ஸ் 7 விக் கெட்டுக்கள்.
- ஆட்ட நாயகன் - மயூரன் 53 ஓட்டங்கள்.



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

70

கலாநிதி முருகர் குணசிங்கம்

2009 இன் பின்னர் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் திடீரெனத் தோற்றம் பெற்ற அரசியல் சார்ந்த அமைப்புக்களின் நடவடிக்கை புலம்பெயர்ந்த தமிழர்களைப் பெரும் குழப்பங்களுக்குள் ஆழ்த்தி இருக்கின்றது.

அத்தோடு தலைமைத்துவப் போட்டிகள், அதிகார வெறி என்பன தமிழர்களையும் தமிழ்த் தேசியத்தையும் விரக்திக்குள் வீழ்த்தி இருக்கின்றன.

மேற்கூறப்பட்டவர்களின் சுயநலப் போக்கு தமிழ்த் தேசியத்திற்குப் பலத்த பின்னடைவுகளையே மென்மேலும் ஏற்படுத்தும் என்பதே உண்மையாகும்.

ஆனால் மேற்படி மாறுபட்ட நிலைமையிலும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் பயணிக்கும் இலட்சக்கணக்கான புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, மக்கள் அவை போன்றவையும் பல ஆயிரக்கணக்கான படித்த இளம் தலைமுறையினரும் தொடர்ச்சியாகத் தமிழ்த் தேசிய எழுச்சிக்குத் தம்மால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்து வருவது வெளிப்படையான உண்மையாகும்.

தமிழ் ஈழத்தில் இருந்து இலங்கை இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்; போர்க்குற்றம் புரிந்த இலங்கை அரசு தண்டிக்கப்பட வேண்டும்; தமிழர்களின் அரசியல் விருப்பங்களுக்கு சுயநிர்ணய அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும்; தாய்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழும் தமிழர்களை உள்ளடக்கிய நியாயமான தேர்தல் உலக நாடுகளின் உதவியோடு நடத்தப்பட்டு, தமிழர்களின் அரசியல் தலைவிதி அதன் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது போன்ற குறிக்கோள்களை மிகவும் உறுதியாக முன்னெடுத்துச் செல்வதைக் கடந்த ஐந்து ஆண்டுகாலப் புலம்பெயர் வாழ் தமிழ் மக்களின் செயற்பாடுகள் வாயிலாக அறிய முடிகின்றது.

புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் வேற்றுமைகளையும் தனிமனித ஆசைகளையும் மறந்து தமிழ் தேசத்தினதும் தமிழ் மக்களினதும் வளமான எதிர்காலம் ஒன்றே தமது ஒட்டுமொத்த இலட்சியம் என்ற அடிப்படையில் ஒன்றுபட்டு இயங்காதவரை தமிழர்களின் எதிர்காலம் மிகப்பெரிய கேள்விக் குறியாகவே இருக்கும்.

### புலம்பெயர்வின் தாக்கமும் விளைவுகளும்

ஈழத்தமிழர்கள் சுமார் பத்து இலட்சத்திற்கும் மேலானவர்கள் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழ்ந்து வருவதால் அதன் தாக்கமும் விளைவுகளும் அவர்கள் தாய்நாட்டிலும் புகுந்த நாட்டிலும் நிச்சயம் ஏற்பட்டு இருக்கும்.

சமூக, பண்பாட்டு, கலைகலாசார, மொழி, பொருளாதார, அரசியல் சார்ந்த சகல துறைகளையும் புலப்பெயர்வானது சாதகமாகவும் பாதகமாகவும் பாதிக்கத் தவறியிருக்க மாட்டாது.

அதுபற்றி இந்த இறுதிக் கட்டுரையில் கலந்துரையாடுவது இவ்வாய்வின் முழுமைக்கு மிகத் தேவையான ஒன்றாக அமையும்.

மேலும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாடுகளின் தேவை கருதி, சில நாடுகளே எடுத்துக்காட்டிற்காகக் கருத்திற்கொள்ளப்படும்.

முதலில் இலங்கையில் இருந்து வெளியேறி அயல்நாடுகளில் வாழுகின்ற மக்கள் தொகையினால் தமிழ் ஈழத்திலும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் ஏற்படுத்திய தாக்கத்தினையும் விளைவுகளையும் பற்றி நோக்குவது மிக முக்கியமானது.

இலங்கை குடிசன மதிப்பு இலாகாவின் 1981 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, சிங்கள மக்கள் 1,09,79,561 **(74 %)** ஆகவும் இலங்கைப் பூர்வீகத் தமிழர் 188 6872 **(12.7%)** ஆகவும் இந்தியத் தமிழர்கள் 818656 **(5.5%)** ஆகவும் முஸ்லிம்கள் 1046926 **(7.0%)** ஆகவும்



ஏனையோர் 114735 **(0.8%)** ஆகவும் பதிவு செய்யப்பட்டு உள்ளனர்.

மொத்த சனத்தொகை 1,48,46,750 ஆகக் காணப்படுகின்றது.

மேற்கண்ட மக்கள் தொகை 1981 இலிருந்து 2012 ஆண்டுகள் வரை சுமார் முப்பது ஆண்டுக் காலத்தில் பாரிய மாற்றங்களைப் பெற்று இருக்கின்றது.

குறிப்பாக சிங்கள, முஸ்லிம் மக்கள் தொகை, கடந்த முப்பது ஆண்டுகளில் அதிகரித்துச் செல்வதையும் ஈழத்தமிழர்கள், மலையகத் தமிழர்களது மக்கள் தொகை பாரிய அளவில் குறைந்து செல்வதையும் காண முடிகிறது.

2012 குடிசன மதிப்பு புள்ளி விபரங்களின்படி சிங்கள மக்கள் 15,17,3,820 **(74.9%)** ஆகவும் ஈழத்தமிழர்கள் 2,270,924 **(11.2%)** ஆகவும் இந்தியத் தமிழர்கள் 8,42,323 **(4.2%)** ஆகவும் முஸ்லிம் மக்கள் 1,869,820 **(9.2%)** ஆகவும் ஏனையவர்கள் 106,836 **(0.5%)** பதிவாகி இருக்கின்றனர்.

மொத்தமாக 20,263,723 மக்கள் இலங்கையில் வாழ்வதாகக் காணப்படுகின்றது.

மேற்படி புள்ளி விபரங்களை அவதானிக்கும்போது, 1981 இல் சுமார் 110 இலட்சமாக இருந்த சிங்கள மக்களின் தொகை 2012 இல் சுமார் 150 இலட்சமாக அதிகரித்துள்ளது.

மேலும் 1981 இல் 10 இலட்சமாக இருந்த முஸ்லிம் மக்கள் தொகை, 2011 இல் சுமார் 18 இலட்சத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

ஆனால் ஈழத்தமிழர்கள் 1981 இல் சுமார் 19 இலட்சமாக இருந்தவர்கள் 2012 இல் 22 இலட்சமாக மட்டுமே அதிகரித்துள்ளார்கள்.

மேலும் தெளிவாகக் கூறப்போனால், கடந்த முப்பது ஆண்டு காலத்திற்குள் சிங்கள மக்கள் 40 இலட்சத்தாலும் முஸ்லிம்கள் 8 இலட்சத்தாலும் அதிகரித்துச் செல்ல, ஈழத்தமிழர்கள் 3 இலட்சம் பேர்களே அதிகரித்துள்ளார்கள்.

மேலும் விளக்கமாகக் கூறுவதாயின் இலங்கையின் மொத்த மக்கள் தொகை 1981 இல் சிங்கள மக்கள் 74 வீதமாகவும் முஸ்லிம்கள் 7 வீதமாகவும் இருந்தனர். 2012 இல் சிங்களவர்கள் 74.9 வீதமாகவும் முஸ்லிம்கள் 9.2 வீதமாகவும் அதிகரித்துள்ளனர். ஆனால் ஈழத் தமிழர்கள் 1981 இல் 12.7 வீதமாக இருந்தார்கள். 2012 இல் 11.2 வீதமாகக் குறைந்து காணப்படுகின்றார்கள்.

மேற்படி புள்ளி விபரங்களின்படி நோக்கும்போது 1981 இல் சுமார் 19 இலட்சமாக இருந்த ஈழத்தமிழர்கள் 2012 இல் சுமார் 27 இலட்சமாக உயர்ந்து இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் சுமார் 22 இலட்சமாகத்தான் கூடி இருக்கின்றார்கள்.

மறுவார்த்தையில் கூறுவதாயின் 30 ஆண்டுகளில் சுமார் 8 இலட்சம் அளவில் அதிகரிக்க வேண்டிய ஈழத்தமிழர்கள் சுமார் 3 இலட்சம் அளவிலேயே அதிகதித்து உள்ளார்கள்.

மேற்படி நிலைமைக்கு முதன்மைக் காரணம், பல இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் நாட்டைவிட்டு அகதிகளாக வெளியேறியமையும் சிங்கள அரசின் இன அழிப்பு நடவடிக்கையில் இலட்சக்கணக்கான தமிழர்கள் கொன்று ஒழிக்கப்பட்டமையும் ஈழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்தவர்களின் உயிர்த் தியாகமும் ஆகும்.

அத்தோடு நாட்டின் அரசியல் நிலைமை ஈழத்தமிழர்களை அடிக்கடி உள்நாட்டுக்குள்ளேயே புலம்பெயர வைத்ததன் விளைவாகவும் பொருளாதாரத் தடைகள் காரணமாகவும் தமிழ் மக்கள் மத்தியில் சனப்பெருக்கம் மிகவும் குறைந்து இருக்கின்றது.

போர் காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் சுமார் 90 ஆயிரம் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர். இது வொரு பாரிய பின்னடைவைத் தமிழர் சனப்பெருக்கத்தில் ஏற்படுத்தி இருக்கின்றது.

இளம் தலைமுறையினர் போராட்டத்தில் இணைந்ததன் விளைவாக, அவர்களது மணவாழ்க்கை தடைப்பட்டது. திருமணம் புரிந்து இருந்தாலும் பிள்ளை பெற்று வளர்க்கும் நிலையிலும் அவர்கள் இருந்திருக்க மாட்டார்கள்.

மேற்படி நிலைமைகளே ஈழத்தமிழர்களின் மக்கள் தொகை இலங்கையில் குறைந்ததற்கான முதன்மைக் காரணிகள் ஆகும்.

தொடக்கத்தில் கூறப்பட்டது போல, சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் பிறநாடுகளில் புலம்பெயர்ந்து சென்றமையே இலங்கைத் தமிழர் மக்கள் தொகையில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தி இருக்கின்றது.

இதன் தாக்கம் இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில், தமிழர் பிரதிநிதிகள் தமக்குக் கிடைக்கக்கூடிய பிரதிநிதித்துவத்தையும் பெற முடியாது போய் விட்டமையை, கடந்த 2012 இல் நடைபெற்ற வடக்குக் கிழக்கு மாகாணத் தேர்தல்கள் காட்டி நிற்கின்றன.

அத்தோடு இதுவரை காலமும் தமிழர்கள் கையில் இருந்த தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசமான கிழக்கு மாகாணம், முதற் தடவையாக மேற்படி தேர்தலில் முஸ்லிம் அரசியல் வாதிகளின் கைக்கு மாறி இருக்கின்றது.

எனவே ஒட்டுமொத்தத்தில் பத்து இலட்சத்திற்கும் மேலான ஈழத்தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறி, பிறநாடுகளில் வாழத் தொடங்கியதன் விளைவாக இலங்கையில் தமிழர்கள் மிகவும் பலவீனமான ஒரு சமூகமாகவும் வலுவற்ற ஒரு அரசியல் நிலைமையிலும் விடப்பட்டு இருக்கின்றார்கள் என்பதே கசப்பான உண்மை ஆகும்.

மறுபுறத்தில் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து 16 இற்கும் மேற்பட்ட நாடுகளில் வாழ்கின்றார்கள் அதில் குறிப்பாக கனடாவிலும் பிரித்தானியாவிலும்தான் அதிக அளவில் வாழ்கின்றனர். பத்து இலட்சத்திற்கும் மேலான புலம் பெயர் தமிழர்களுள் மூன்றில் ஒரு பகுதியினர் கனடாவில் வாழ்கின்றனர்.

(தொடரும்)

# ஆதனவரி அறவீட்டு வீதத்தை குறைக்க நடவடிக்கை எடுங்கள்

## சிறீதரன் எம்.பி.கோரிக்கை



(பரந்தன்)

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அறவிடப்படும் ஆதனவரி தொடர்பில் கோரிக்கையொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளருக்கு எழுத்து மூலம் முன்வைத்துள்ளார்.

குறித்த கோரிக்கை கடிதத்தில் கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அறவிடப்படும் ஆதனவரி, அதிகரித்த வீதத்தில் காணப்படுவதாக பல்வேறுபட்ட தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், அதற்குரிய தீர்வை எட்டும் நோக்கோடு என்னால் இரண்டு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டிருந்தன.

கிளிநொச்சி நகர வர்த்தக அபிவிருத்திச் சங்கம், கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகர் அபிவிருத்திச் சங்கம், கிளிநொச்சி மாவட்ட வணிகர் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்களையும் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளையும் இணைத்து 2020.08.26 ஆம் திகதி எனது அலுவலகத்திலும் 2020.09.05 ஆம் திகதி கே.கே.மண்டபத்தில் நடைபெற்ற கருத்துப் பகிர்வுகளின் போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் ஆதனவரி அறவீட்டு வீதத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-4-312)

## சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் அன்பளிப்பு

(கொழும்பு)

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. கொரோனா அச்சுறுத்தல் காணப்படுகின்ற காலப்பகுதியில்முன்னின்றுழைத்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சேவையைப் பாராட்டியே குறித்த மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

அதற்கமைய இன்று 805 பேருக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் கொவிட் -19 விசேட வேலைத் திட்டம் மற்றும் ஆரம்ப சுகாதார சேவையினை வலுப்படுத்தும் திட்டத்தின் பணிப்பாளர் ஜயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.(ஐ-6)

# உயிரிழப்புகள்

## வாகன விபத்தில்...

(கொழும்பு)

ராகலை -சூரியகாந்தி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 11 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

லொறி ஒன்று மோதியதில் படுகாயமடைந்த சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

ராகலை பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

## யானை தாக்கியதில்...

(மொனராகலை)

மொனராகலை -சியம்பலாண்டுவ பகுதியில் காட்டு யானை தாக்கியதில் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.

கிராமத்திற்குள் புகுந்த யானையை விரட்ட முயற்சித்த போதே அவர் தாக்குதலுக்கு உள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.(ஐ-4)

## தீக்கிரையான பெண்...

(ஏறாவூர்)

மண்ணெண்ணெய் சிதறியதால் தீப்பற்றிக் கொண்ட 19 வயதான குடும்பப் பெண் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஏறாவூர் பொலிஸ் பிரிவின் குமாரவேலியார் கிராமத்தில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2119

### ரமேஸ்பாபு




### தாட்சாயினி




### சானுகா




### புருசோத்தமன்




### ரவீந்திரகுமார்




### சதீஸ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2020 - 16.10.2020

## தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்



சார்வரி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். அவரை 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் பார்ப்பதால் 'குருமங்கள யோகம்' ஏற்படுகிறது. மாதத் தொடக்க நாளில் சந்திரனையும் குரு பார்ப்பதால் 'குரு சந்திரயோகம்' உருவாகின்றது. 6 ஆம் இடத்தில் சூரியனுடன் உச்சம் பெற்ற புதன் கூடி, 'புத ஆதித்ய யோக'த்தை உருவாக்குகிறார். எனவே இம்மாதம் இனிய மாதமாகவே அமையப் போகின்றது.

ஜென்மத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய், வக்கிர இயக்கத்தில் இருப்பது நன்மைதான். அஷ்டமாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால், அதன் வக்கிர இயக்கத்தின் மூலம் சுபச்செலவுகள் அதிகரிக்கும். குருவின் பார்வை உங்கள் இராசியில் மட்டுமல்லாமல் சகாய ஸ்தானத்திலும் புத்திர ஸ்தானத்திலும் பதிகின்றது. எனவே புதிய திருப்பங்கள் பலவும் ஏற்படும்.

இதுவரை வக்கிர இயக்கத்தில் இருந்த குருவும் சனியும் வக்கிர நிவர்த்தியாகி விட்டார்கள். எனவே 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருவின் பலத்தால் பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். தூரதேசத்தில் இருந்து அனுகூலமான தகவல் வந்து சேரும். 10, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனியின் பலத்தால் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

புத ஆதித்ய யோகத்தின் விளைவாக கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும். கருத்து வேறுபாடு காரணமாக பேசாமல் இருந்தவர்கள் ஒன்றிணைவர். அலுவலகப் பணியில் இருந்த நெருக்கடிகள் அகலும்.

**துலாம் புதனின் சஞ்சாரம்**

செப்டெம்பர் 21 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது மாமன், மைத்துனர் வழியில் உள்ள பிரச்சினைகள் சீராகும். அவர்கள் மூலம் அனுகூலங்கள் கிடைக்கும். இல்லத்தில் மங்கல விழாக்கள் நடைபெறுவதில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். உடன்பிறப்புகள் மனம் மாறி பாகப்பிரிவினைக்கு ஒத்துவருவார்கள்.




**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்**

செப்டெம்பர் 28 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

இல்லம் கட்டிக் குடியேற எடுத்த முயற்சி கைகூடும். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தில் பதவி உயர்வு கிடைக்கலாம்.

**புதனின் வக்கிர இயக்கம்**

செப்டெம்பர் 30 ஆம் திகதி துலாம் இராசியிலும் பிறகு ஒக்டோபர் 8 ஆம் திகதி கன்னி இராசியிலும் புதன் வக்கிர இயக்கத்தில் வருகின்றார். 6 இற்கு அதிபதி வக்கிரம் பெறுவதால் எதிரிகளின் பலம் குறையும். லாப நோக்கத்தோடு பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள். வேலை கிடைக்காதவர்களுக்கு வேலை கிடைக்கும்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் இல்லத்து பூஜை அறையில் வள்ளி-தெய்வானை சமேத வடிவேலனை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். பொருளாதாரத்தில் இருந்த ஏற்ற இறக்க நிலை மாறும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். விலகி இருந்த உடன்பிறப்புகள் மீண்டும் வந்திணைவர். தாயின் உடல்நலம் சீராகும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றங்கள் கிடைக்கும். துர்க்கை வழிபாடு துயரம் தீர்க்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும்



சார்வரி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். தனாதிபதி புதன் உச்சம் பெற்றிருக்கின்றார். விரயாதிபதி செவ்வாய், சொந்த வீட்டில் வலுப்பெற்று குருவால் பார்க்கப்படுகின்றார்.

எனவே தொழில் முன்னேற்றம், உத்தியோக அபிவிருத்தி, இடமாற்றங்களால் இனிய பலன் போன்றவை கிடைக்கக் கூடிய சூழ்நிலைகள் உண்டு. இருப்பினும் விரய ஸ்தானத்தில் செவ்வாய் வக்கிர இயக்கத்தில் இருப்பதால் இந்த மாதம் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும்.

குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. வாக்கு, தனம், குடும்பம் ஆகிய இடங்களையும் தாய் மற்றும் கல்வி, வாகனம், இடமாற்றம் ஆகியவற்றை குறிக்கும் இடங்களையும் குரு பார்ப்பதால் அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. எனவே அவை சம்பந்தப்பட்ட முயற்சிகள் அனைத்திலும் வெற்றிகள் கிடைக்கும்.

தற்சமயம் ஜென்மத்தில் ராகுவும் 7 இல் கேதுவும் வந்திருக்கின்றார்கள். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். அதேநேரம் வாழ்க்கைத் துணையோடு பிரச்சினைகள் வந்து அலைமோதும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குருவின் பார்வை சுக ஸ்தானத்தில் பதிவதால், மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும் என்றே சொல்லலாம்.

**துலாம் புதனின் சஞ்சாரம்**

செப்டெம்பர் 21 ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் செல்கின்றார். 6 இல் சஞ்சரிக்கும் புதன், உங்களுக்கு தனவரவில் இருந்த தடைகளை அகற்றும். எதிரிகளின் தொல்லை அகல எடுத்த முயற்சி பலன் தரும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும்.

புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கலாம்.

**சிம்ம சுக்கிரனின் சஞ்சாரம்**

செப்டெம்பர் 28 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிநாதன் சுக ஸ்தானத்தில் வரும் இந்த நேரம் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். மருத்துவச் செலவுகள் குறையும். உங்கள் தொழில் வளர்ச்சிக்கு பெற்றோர்கள் உறுதுணையாக இருப்பர். சகோதர உறவுகள் தக்க சமயத்தில்




கைகொடுத்து உதவும். கட்டுமானப் பணிகளில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும்.

**புதனின் வக்கிர இயக்கம்**

செப்டெம்பர் 30 ஆம் திகதி துலாம் இராசியிலும் ஒக்டோபர் 8 ஆம் திகதி கன்னி இராசியிலும் வக்கிர இயக்கத்தில் புதன் வருகின்றார். தன பஞ்சமாதிபதி வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். வளர்ச்சிப் பாதையில் இடையூறுகள் வந்து சேரும். திடீரென வந்த நட்பு பகையாகலாம்.

குடும்பத்தில் உள்ளவர்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். விரயங்களைச் சமாளிப்பது கடினம். உத்தியோகத்தில் சகப் பணியாளர்களின் தொல்லை அகலும்.

இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து வீட்டு பூஜை அறையில் மகாலட்சுமியை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

சுபவிரயங்கள் அதிகரிக்கும் மாதம் இது. வீடு பழுது பார்ப்பது, பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி திட்டங்கள் தீட்டுவது போன்றவற்றிற்காகவும் செலவிடுவீர்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் வந்து சேரும். புதனின் வக்கிர காலத்தில் மற்றவர்களை நம்பி செயற்பட இயலாது. பெருமாள்-லட்சுமி வழிபாடு நன்மை தரும்.

(தொடரும்)

# 20 ஆவது திருத்த வரைபை மாற்றமின்றி சமர்ப்பிக்க தீர்மானம்



(கொழும்பு)
20 ஆவது அரசியலமைப்பு திருத்த வரைபை எதுவித மாற்றமின்றி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடிவு செய்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை அமைச்சர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

சபையில் சமர்ப்பிக்கப்படும் அரசியலமைப்பு வரைபில் எந்தவொரு திருத்தத்தையும் பாராளுமன்றம் மேற்கொள்ளவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நாட்டிற்காக பணியாற்றுவதற்கு மக்களால் தனக்கு ஆணை வழங்கப்பட்டதாகவும், எனவே 19 ஆவது திருத்தத்தை எவ்வாறெனினும் நீக்குவேன் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

இந்த நோக்கத்திற்காக 20 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும், தேவைப்பட்டால் வரைபில் எந்தவொரு திருத்தத்தையும் பாராளுமன்றினால் மேற்கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எனினும், ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக் காலங்களும், 19 ஆவது திருத்தத்தில் கூறப்பட்டுள்ள ஜனாதிபதியின் இரண்டு கால வரம்பும் மாற்றப்படாது என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (ஜ-4)

# கைதி தூக்கிட்டு தற்கொலை

(களுத்துறை)
களுத்துறை சிறைச்சாலையின் கைதியொருவர் சிறைச்சாலை வளாகத்திற்குள் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

ஹெரோயின் தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் அவர் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்கொலை செய்துள்ளார். (ஜ-4)



# ஆன்மீகம்

## இனிய உறவுகள் இற்றுப்போகலாமா?

(நேற்றைய தொடர்ச்சி...)

நாட்டில் உறவுச் சங்கிலிகளை நம்மவர்கள் அறுத்துக் கொள்ளும் போது காட்டிலும் கூட உறவுகளை உறுதிப்படுத்தினார் ராமர். அதுமட்டுமல்ல, தீயவரம் கேட்ட கைகேயியும், அவள் மகன் பரதனும் எனக்கு உறவல்ல அவர்கள் என் குடும்ப உறுப்பினர்களாக இருக்க முடியாது என்று கோபத்தில் சபதம் கூறினார் தசரதர். பின்பு பதினான்கு வருட வனவாசம் முடிந்து ராமர் திருமுடி சூட்டுவிழா நடப்பதற்கு முன்பு தசரதர் உயிர்த்து எழுந்தார். ''ராமா! இப்போதுதான் என் மனம் மிக மகிழ்வில் உள்ளது. உனக்கு வேண்டியதைக் கேள்! இரு வரங்கள் தருகிறேன்'' என்கிறார். அப்போது ராமர் கேட்கும் இரு வரங்கள் என்ன தெரியுமா?

**'தீயன் என்று நீ துறந்த தெய்வமும் மகனும்**
**தாயும் தம்பியும் ஆம் வரம் தருக!'**

தீயவன் என்று தாங்கள் துறந்துவிட்ட கைகேயி அம்மையார் மீண்டும் என் தாயாராகவும், பரதன் என் தம்பியாகவும் ஆக வேண்டும். இதுவே நான் கேட்கும் இரு வரம்' என்கிறார். வலுவான உறவுகளே வாழ்க்கையின் இன்பங்கள் என்று அறிந்து கொள்வோம். பாண்டவர்-கௌரவர் உறவினர்களாக இருந்தும் அவர்களுக்குள் போர் மூண்டது. அதேசமயம் அவர்களுக்குள் பாசப்பிணைப்பு இருந்ததையும் கீழ்வரும் சம்பவத்தால் அறியலாம். கந்தர்வ அரசன் சித்திரசேனன் ஒரு முறை துரியோதனனுடன் போரிட்டு அவனைக் கைது செய்து இழுத்துச் சென்றான். இதைக் கேள்விப்பட்ட தருமர் தன் தம்பியர்களைப் பார்த்து ''உடனே சென்று, கந்தர்வ அரசனிடமிருந்து துரியோதனனைக் காப்பாற்றுங்கள்'' என்றார்.

பீமன் 'என்ன சொல்கிறீர்கள்? துரியோதனனை நாம் காப்பாற்றுவதா?' என்று வெறுப்பு காட்டினார். 'ஆமாம், பீமா! நம் குடும்ப உறுப்பினர்களை வெளி தேசத்து அரசன் ஒருவன் பிடித்துச் செல்லும்பொழுது நாம் ஐந்துபேர் கௌரவர்கள் நூறு பேர் என்ற கணக்கு அடிபட்டுப் போகிறது. நாம் நூற்றி ஐந்து பேரும் ஒரே குடும்பம்' என்றார் தர்மர். பின் துரியோதனன் பாண்டவர்களால் மீட்கப்பட்டான். 'ஒரு தாயின் வயிற்றில் பிறந்தோர் - தம்முள் சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ!' என்றுதானே பாடுகிறார் பாரதியார்! 'அன்னை இல்லம்' என்று ஒருவர் தன் வீட்டிற்கு அழகாக பெயர் வைத்திருந்தார். உங்கள் பெற்றோர் எங்கே இருக்கிறார்கள் என்று கேட்டபோது 'முதியோர் இல்லத்தில்' என்று பதில் வந்தது. காரணம் அவர்களின் தலையீடும், அறிவுரையும் தானாம்!

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்', 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' போன்ற முதுமொழிகளின் சாரம் இன்றைய தலைமுறையினரிடம் போய்ச் சேராததால்தான் முதியவர்கள் ஒரேயடியாகப் போய்ச் சேர்வதற்கு முன்பு விடுதிகளில் போய்ச் சேர்ந்து ஒத்திகை பார்க்கிறார்களா? உதவிகளும், மற்றவர்களின் அனுசரணையான வார்த்தைகளும், பிள்ளைகளின் அன்பான அரவணைப்பும் இல்லாமல் முதியோர் விடுதியிலும், ஓய்வூதியத்திலும்தான் பலரின் வயோதிக வாழ்க்கை ஓட்டப்பட்டு வருகிறது. ஒருவர் சொன்னார்: 'எனக்கு என் பெண்ணும் உதவவில்லை. சன்னும் உதவவில்லை. பென்சன்தான் உதவுகிறது.' வாழ்வதற்குப் பொருள் வேண்டும்தான்! ஆனால், வாழ்வதிலும் பொருள் வேண்டாமா?

# கைதுகள்



## சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல...

(கொழும்பு)
சட்டவிரோத விசாக்களை பயன்படுத்தி கனடா செல்ல முற்பட்ட 13 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை குறித்த நபர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சட்டூவிரோதமாக கனடா செல்ல முயற்சித்துள்ளனர்.

அத்துடன் குறித்த 13 பேரும் கட்டாரின் டோஹா ஊடாக கனடா செல்ல முயற்சித்த வேளை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## நிதிமோசடியில் ....

(கொழும்பு)
வெளிநாடுகளில் லொட்டரிகள் வெல்லப்பட்டதாகக் கூறி 60 மில்லியன் ரூபாவரை மோசடி செய்த நைஜீரியா மற்றும் சீனாவைச் சேர்ந்த 16 பிரஜைகள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வெல்லப்பட்ட பணத்தினை சுங்கத்திலிருந்து விடுவிக்க வேண்டுமெனக்கூறியே இவ்வாறு பணத்தை மோசடி செய்துள்ளதாக டி.ஐ.ஜி லால் செனரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இதுவரை 101 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-6)

## ஹெரோயினுடன் ...

(கொழும்பு)
பேலியகொடை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது ஹெரோயினுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


சோதனை நடவடிக்கைகளின் போது பேலியகொடை 1 ஆம் குறுக்குத்தெரு பகுதியில் சந்தேகத்திற்கிடமான ஆட்டோ ஒன்று நிறுத்தி சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது 100 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் விற்பனையில் பெற்ற பணம் 3 இலட்சம் ரூபா ஆகியன மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 |
| தக்காளி | 200 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 110 | 80 |
| கோவா | 130 | 140 | 160 |
| கரட் | 80 | 200 | 200 |
| பூசணி | 120 | 120 | 140 |
| புடோல் | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 |
| சின்னவெங்காயம் | 140 | 160 | 160 |
| பெரியவெங்காயம் | 170 | 180 | 180 |
| பாகற்காய் | 350 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 140 | 150 | 140 |
| பயற்றங்காய் | 200 | 150 | 120 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 100 | 90 | 100 |
| கறிமிளகாய் | 300 | 260 | 320 |
| முருங்கைக்காய் | 350 | 240 | 200 |
| போஞ்சி | 320 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 70 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 120 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 220 | 200 | 240 |
| முள்ளங்கி | 100 | 70 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | -- | 100 |




# வல்லவர் யார்?



ஒருநாள் எறும்பு தரையில் மெல்ல ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. அப்போது பூரான் அதன் அருகே வந்தது. நண்பா நான் வருவதைக் கூடக் கவனிக்காமல் எங்கே சென்று கொண்டிருக்கிறாய்? என்று கேட்டது.

எறும்பு, பூரான் நண்பா! உன்னைக் கவனித்துக் கொண்டிருந்தால் என் கடமையை நான் சரிவர செய்ய முடியாதே என்று சொன்னது. அப்படியென்ன முக்கியமான கடமை? என்று பூரான் கேட்டது.

மழைக்காலத்திற்குத் தேவையான உணவை வெயில் காலத்திலேயே தேடிச் சேர்த்து வைப்பது என் கடமை என்றது எறும்பு.

உன்னிடம்பேசிக் கொண்டிருந்தால் என் கடமையைச் செய்ய முடியாது என்று கூறி எறும்பு சென்று விட்டது. பூரானுக்கு எறும்பின் மேல் வருத்தம். அதனால் எறும்பை மட்டம் தட்டியே தீர வேண்டும் என்று நினைத்துக்கொண்டது.

அடுத்த நாள் எறும்பு வரும் வழியில் நின்று எறும்பே, கடமையை சரிவரச் செய்வதால் மட்டும் நீ வல்லவனாக முடியாது.

உன்னால் என்னைப் போல வேகமாக ஊர்ந்து வர முடியுமா? அப்படி வந்தால் நீ என்னை விட வல்லவன் என்று ஒத்துக்கொள்கிறேன் என்றது.

அதற்கு எறும்பு மிக அமைதியுடன் பூரானே, உன் அளவுக்கு வேகமாக என்னால் ஊர முடியாது.

அந்த தைரியத்தில் நீ பேசுகிறாய். ஆனால், நான் செய்யும் சில காரியங்களை உன்னாலும் செய்ய முடியாது.

அதனால் யார் வலியவன் என்ற பரீட்சையெல்லாம் வேண்டாம் என்று திரும்பவும் கூறியது. பூரானோ அப்படி என்ன சாகசத்தை நீ செய்வாய் என்று கேட்டது.

எறும்பு பூரானை ஒரு தண்ணீர் தொட்டியின் மேல் அமர்ந்து வேடிக்கை பார்க்கச் சொல்லி விட்டு கரையின் அருகில் இருந்த ஒரு துரும்பில் ஏறி தண்ணீரில் விழுந்து அந்த துரும்பைப் பிடித்துக்கொண்டு தண்ணீரில் மிதந்தது. பூரானைப் பார்த்து உன்னால் இப்படிச் செய்து காட்ட முடியுமா? என்று கேட்டது.

பூரான் அப்போதுதான் தனது தவறினை உணர்ந்தது. பின்பு, பூரான்எறும்பிடம் மன்னிப்புக்கேட்டு சிறந்த நண்பனாகத் திகழ்ந்து வந்தது.

**நீதி :**
**எல்லோருக்கும் சில வல்லமைகளும் சில இயலாமைகளும் இயற்கையிலேயே உண்டு.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்

71



நந்தியின் உருவம் பொறிக்கப்பட்ட தஞ்சைப்பெரிய கோயில் மதிற்சுவர்

இந்த நானூறு ஆடல் மகளிரும் தங்கள் இயற்பெயருக்கு முன்னால் நக்கன் என்னும் சொல்லைப் பொதுப்பெயராகக் கொண்டிருந்தார்கள். நக்கன் என்ற சொல் சிவபெருமானைக் குறிப்பதாகும்.

கோயிற் பணிகளுக்கென்றே தங்களை அர்ப்பணித்துக்கொண்ட இவர்கள் நக்கன் என்கிற முன்னொட்டைத் தங்கள் இயற்பெயருடன் இணைத்துக் கொண்டார்கள்.

ஆடற்கலைக்கு ராஜராஜன் அளித்த முக்கியத்துவம் கோயிலில் வடிக்கப்பட்டுள்ள கரணச் சிற்பங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

**ஓவியங்கள்**

தஞ்சைப் பெரிய கோயிலைச் சுற்றியிருந்த உட்பிரகாரம் பல ஆண்டுகளாகத் திறக்கப்படாமலே இருந்தது. அதனால் வௌவால்களுக்கு மிக வசதியாகப் போய்விட்டது.

கருவறையைச் சுற்றியுள்ள உட்சுற்று அறையில் இருந்த சோழர்கால ஓவியங்கள் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை வெளியுலகுக்குத் தெரியாமலே இருந்தன.

உட்பிரகாரத்தில் உள்ள ஓட்டை வழியாகப் பறவை ஒன்று பறந்து வந்தபோது ஏதோ ஒன்று தோன்றி உட்பிரகாரம் திறக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டது.

அப்போதுதான் உள்ளே இருந்த ஓவியங்களைக் கண்டும் எல்லோரும் பிரமித்துப் போனார்கள்.

பல்லவர்கால ஓவியக் கலையைக் காஞ்சி கயிலாயநாதர் கோயில், பனைமலை தலகிரீசுவரர் கோயில்களிலும் மராத்திய ஓவியக் கலையைத் தஞ்சை மாவட்டத்தின் பல கோயில்களிலும் விஜயநகர நாயக்கர் கால ஓவியக் கலையை மதுரை மற்றும் பல்வேறு கோயில்களிலும் என மிகச்சிறப்பான பண்டைய தமிழ் ஓவியக் கலையை இவ்விடங்களில் காணமுடியும்.

அதேபோல் சோழர் கால ஓவியக் கலையைக் காண்பதற்கான மிகப் பொருத்தமான இடம் பெரியகோயில். இந்த ஓர் இடத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும் சோழர் கால ஓவியங்கள் இத்தனை பத்திரமாக நமக்குக் கிடைக்கவில்லை.

சுந்தரர், சேரமான் பெருமாள் கதைகள், திரிபுராந்தகரின் போர்க் காட்சிகள் போன்றவை சோழர்கால ஓவியங்களாக இருந்தன.

தஞ்சைப் பெரிய கோயிலின் உட்சுவரில் உள்ள ஓவியங்களில் கரூர்த் தேவர், நடனமகளிர் மற்றும் ராஜராஜனின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன.

நல்லவேளை இவை வெளிப்புறப் பிரகாரங்களில் வரையப்படவில்லை. சுவர்களில் முப்பரிமாண ஓவியங்களை வரைந்து காட்டியிருக்கிறார்கள்.

இவை அனைத்தும் தனி மனிதனால் வரையப்பட்டதல்ல. குழுவாகப் பணியாற்றி வரைந்திருக்கிறார்கள்.

(தொடரும்)

சரியானது என்று உணர்ந்த பின்னும் அதை செய்யாமல் இருப்பதுதான் மகா கோழைத்தனம்.
- கன்பூஷியஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களுக்கான அரசியல் கட்டமைப்பை பலப்படுத்தினால் என்ன?

நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு எதிராக வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் தாக்கல் செய்த வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளமை கண்டு தமிழ் மக்கள் திருப்தியடைந்துள்ளனர்.

வழக்கை வாபஸ் பெறுவதாக டெனீஸ்வரன் நீதிமன்றில் அறிவித்தமை காலம் உணர்ந்து அவர் செய்த கைங்கரியம் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

எமக்குள் ஆயிரம் பிரச்சினைகள், பிடுங்குப்பாடுகள் இருக்கலாம். ஆனால் நாம் தமிழர் எனும்போது பகைமை மறந்து ஒற்றுமைப்படுவது மிகவும் கட்டாயமானது.

அந்த வகையில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் – டெனீஸ்வரன் ஆகியோர் தமக்கிடையே இருந்த வழக்குகளை வாபஸ் பெற்றுக் கொண்டு இருவரும் கைலாகு கொடுத்தமை எங்களை எவராலும் பிரிக்க முடியாது. நாம் உறுதியாக இருக்கின்றோம் என்பதை நிலைநாட்டுவதாக அமைகிறது.

தவிர, பிரஸ்தாப வழக்குத் தொடர்பில் சம்பந்தப்பட்ட இருவரும் தெரிவித்த கருத்துக்களும் வரவேற்கப்பட வேண்டியவை.

இவை ஒருபுறமிருக்க; ஈழத் தமிழினத்தின் வரலாற்றை, அவர்களுக்கு இந்த நாட்டில் இருக்கக்கூடிய உரிமையை, இந்த நாட்டின் ஆதிக்குடிகள் யார் என்ற உண்மையையெல்லாம் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்றத்தில் விலாவாரியாக எடுத்துக் கூறி வருகிறார்.

இஃது பேரினவாதிகளுக்குக் கடுப்பை ஏற்படுத்தியிருந்தாலும் அவர்களைப் பார்த்து இந்த நாட்டின் ஆதிக்குடிகள் யார் என்பதை ஆய்வு செய்வதற்கு குழுவை அமைத்து அறியுங்கள் என நீதியரசர் விக்னேஸ்வரன் கொடுத்த பதில் சிங்களக் கடும்போக்காளர்களின் வாய்க்கொழுப்பைக் கரைத்துள்ளது.

நிலைமை இதுவாக இருக்க, நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்கை வாபஸ் பெறவேண்டுமென உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கும் நம்மவர்கள் டெனீஸ்வரனுடன் கதைத்திருந்தனர்.

அதிலும் குறிப்பாக நம் சட்டத்தரணிகள் இது விடயத்தில் தளராது செயற்பட்டனர். அதனால் எம் இனத்தை மற்றவர்கள் விமர்சிக்கின்ற சூழமைவு இல்லாமல் ஆக்கப்பட்டது.

இங்குதான் நாம் கேட்பது, இந்தச் சந்தர்ப்பத்தோடு ஒரு பலமான தமிழ் அரசியல் கட்டமைப்பை நாம் உருவாக்கினால் என்ன?

பகைமை மறந்து, பதவி ஆசை துறந்து, தமிழினத்துக்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஒரு பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்கினால் நாம் சாதிக்கக் கூடியவை ஏராளம்.

# நான்கு வர்த்தமானி அறிவித்தல்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தீர்மானம்

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்றுப்பரவலைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை சீர்செய்யும் நோக்கில் தயாரிக்கப்பட்ட இறக்குமதியை முறையாக ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நான்கு வர்த்தமானி அறிவித்தல்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

கொவிட்-19கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதி மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறைக்கும் நோக்குடன் இறக்குமதியை முறையாக முன்னெடுத்தல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை வழமை நிலைக்குக் கொண்டு வருதல் ஆகிய விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரை கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

அதற்கமைவாக "சுபீட்சமான எதிர்காலத்திற்கான நோக்கு" என்றகொள்கைக்கு ஏற்ப தேசிய பொருளாதாரத்தை வலுவூட்டல் மற்றும் மறுசீரமைப்பிற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக சுங்க வரிகளை தீர்மானிப்பதற்கான குழுவொன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# உரிமையை உறுதிப்படுத்த வாக்காளர் இடாப்பில் பதிவிடுங்கள்

## செ.காந்தீபன்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்காளர் மீளாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கடந்த 2002 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிறந்தவர்கள் உட்பட அனைவரும் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்ய வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் செ.காந்தீபன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் உள்ள 133 கிராம உதிதியோகத்தர் பிரிவுகளிலும் மீளாய்வு நடவடிக்கைகள் தற்போது கிராம உத்தியோகத்தர் செயலகங்கள் ஊடாக நடைபெற்று வருகின்றது.

எனவே கிராமங்களில் வாழும் புதிய வாக்காளர்கள் மற்றும் மாவட்டங்கள் மாறி மீள் குடியேறியுள்ள வாக்காளர்கள் உட்பட அனைரும் தமது பதிவுகளை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யவேண்டும்.

தற்போது பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்கும் மற்றும் ஏனைய சமூகவேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் வாக்காளர் இடாப்பின் பதிவின் உறுதிப்படுத்தல் கட்டயாமாக்கப்படவுள்ளமையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைவரும் இந்த மீளாய்வு நடவடிக்கையினை தவற விடாது பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர் தெரிவித்தார். (5-4-15)

## 18 வயதானாலும் சிறுவர்களே

அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

சிறுவர்கள் என்ற அங்கீகாரத்துக்கான வயதெல்லையை 14 இலிருந்து 18 ஆக உயர்த்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அதேநேரம் வேலை வாய்ப்புக்கான குறைந்தபட்ச வயதை 15 முதல் 16 வயது வரை உயர்த்தவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. (2-7)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

உன்னை அதிர்ஷ்டம் குறைந்தவனிடம் உன் இனத்தைப் பற்றிப் பேச வேண்டாம்.- புளூடார்க்

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

காசியில் சென்று காராம் பசுவை அறுத்தவன் செய்கின்ற பாவத்துக்கு நான் போவேனாக என்று ஒருவன் கூறுகிறான். இதனால் மற்ற இடங்களில் காராம்பசுவை அறுப்பது சரி என்று பொருளல்ல. காசியில் சென்று அறுப்பது மிகுந்த பாவம் என்பதையே குறிக்கின்றது.

(தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** பெரியவிளான்,இளவாலை, மாரீசன்கூடல், சேந்தாங்குளம், மெய்கண்டான், ஆலடி. கைதடி வடக்கு, நவபுரம், சுன்னாகம் மின் நிலையப்பிரதேசம், உரும்பிராய் பிரதேசம், அண்ணா பண்ணை, அங்கிலிப்பாய், அன்னக்கை, குமரகோட்டம், கோண்டாவில் இ.போ.ச. பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்** முத்தையன்கட்டு கனகரட்ணபுரம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** வாரிக்குட்டியூர், நித்தியநகர் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** கற்கிடந்தகுளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்


### அழகன் முருகப்பெருமானின் ஆயுதங்கள்

"முருகனின் ஆயுதங்கள்" என்பது முருகப் பெருமானின் படைக்கலங்கள் என்று பொருளில் விளங்குவதாகும். சூரன் முதலிய அசுரர்களை வென்று வாகை சூட, கந்தப் பெருமான் கொண்ட பல்வேறு போர்க்கோலங்களில் அவரது கரங்களில் கொண்ட படைக்கலங்களே அயுதங்களாக அமைந்துள்ளன. அப்பெருமானது கரங்களில் திகழும் அனைத்துமே ஆயுதங்கள் அல்ல. உதாரணமாக ஜபமாலை, கமண்டலம், கரும்பு, வில், மலரம்பு, தாமரை, நீலோத்பலம், பூரணகும்பம், சுருவம் முதலானவற்றை வெவ்வேறு வடிவங்களில் காரணகாரியம் கருதி அவரது கரங்களில் ஏந்தியுள்ளார். பன்னிரு கரமுடைய பெருமான் ஆதலால் மற்ற எந்தக் கடவுளருக்கும் இல்லாத வகையில் அதிகமான எண்ணிக்கையில் ஆயுதங்களை உடையவர் இவரே.

முருகப் பெருமானது பல்வேறு வடிவங்களைப் பற்றி விபரிக்கும் குமாரதந்திரம், ஸ்ரீதத்வநிதி, தியானரத்னாவளி முதலான சிற்ப நூல்களில் அவரது ஆயுதங்களைப் பற்றிய விபரங்களையும் அறிய முடிகிறது. தணிகைப் புராணத்தில் முருகனது வடிவங்களைப் பற்றியும், அகத்தியர் அருள்பெறு படலத்தில் ஆயுதங்களைப் பற்றியும் விபரம் அறிய முடிகிறது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் முதலான நூல்களில் முருகனது படைக்கலங்களைப் பற்றிய விபரங்கள் காணக்கிடக்கின்றன. (தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# சுனாமி



சுனாமி அல்லது கடற்கோள் அல்லது ஆழிப்பேரலை (Tsunami, ஜப்பானிய மொழி "துறைமுக அலை") என்பது கடல் அல்லது பெரிய ஏரி போன்ற பெரிய நீர்ப்பரப்புகளில் சடுதியாகப் பெருமளவு நீர் இடம்பெயர்க்கப்படும் போது ஏற்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அலைத் தொடர்களைக் குறிக்கும். நிலநடுக்கம் (பூமிஅதிர்ச்சி), மண்சரிவுகள், எரிமலை வெடிப்பு, விண் பொருட்களின் மோதுகை போன்றவை சுனாமி அலைகளை ஏற்படுத்தக் கூடிய மூலக் காரணிகளாகும்.

சுனாமி என்பது ஜப்பானியச்சொல். சு என்றால் துறைமுகம். நாமி என்றால் அலை. எனவே சுனாமி என்றால் "துறைமுகஅலை" என்று பொருள். சுனாமி சில நேரங்களில் பேரலைகள் எனக் குறிப்பிடப்படுகிறது. சுனாமி அல்லது கடற்கோள் அல்லது ஆழிப்பேரலை, கடல் அல்லது பெரிய ஏரி போன்ற பெரிய நீர்ப்பரப்புகளில் சடுதியாகப் பெருமளவு நீர் இடம்பெயர்க்கப்படும் போது ஏற்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அலைத் தொடர்களைக் குறிக்கும். நிலநடுக்கம் (பூமி அதிர்ச்சி), மண்சரிவுகள், எரிமலை வெடிப்பு, விண் பொருட்களின் மோதுகை போன்றவை சுனாமி அலைகளை ஏற்படுத்தக் கூடிய மூலக் காரணிகளாகும். சுனாமி உண்மையில் அலைகள் இல்லை. ஏனெனில் சமீபத்திய ஆண்டுகளில், இத்தொடர் அறிவியல் சமூகத்தில் பயனிழந்து உள்ளது. ஒரு காலத்தில் பிரபலமாக இருந்த இந்த வார்த்தை அதன் பொதுவான தோற்றத்திலிருந்து பெறப்பட்டது. இங்கு "பேரலை" என்பது ஒரு நம்ப முடியாத உயர் அலை போன்ற தோற்றத்தின் காரணமாக ஏற்பட்ட பெயராகும். சுனாமி, கடலலை இரண்டும் கடலில் அலையை உருவாக்கி நிலத்தை நோக்கிச் செலுத்துகிறது. இதில் சுனாமியால் ஏற்படும் கடல்நீர் ஏற்றம் பெரிய அளவினதாகவும் அதிக நேரம் நீடிக்கக் கூடியதாகவும் அதனால் உண்டாகும் இயக்கம் மிகவும் அதிகமாகவும் இருக்கும்.

"அலை" என்ற வார்த்தைக்கு "போல" அல்லது அதே தன்மை கொண்ட என்ற பொருளும் உண்டு. சுனாமி என்பது துறைமுகங்களில் ஏற்படும் அலை அல்ல என்று புவியியலாளர்கள் மற்றும் கடலியலாளர்களும் கருதுகின்றனர். சுனாமிக்கு வேறுசில மொழிகளில் வேறு வார்த்தைகள் உண்டு. தமிழில் "ஆழிப் பேரலை" என்று உள்ளது. ஆக்கினஸ் மொழியில் சுனாமியை "பியுனா" அல்லது "அலோன்" புலூக் என்பர். "அலோன்" என்ற வார்த்தைக்குப் பிலிப்பைன்ஸ் மக்களின் மொழியில் "அலை" என்று பெயர்.

இந்தோனேசியாவின் மேற்கு சுமித்ரா கடற்கரையில் உள்ள சிமிலி தீவில் உள்ள மொழியில் "சுமாங்" என்றும் சிகுலி மொழியில் "எமாங்" என்றும் அழைப்பர்.

கி.மு.426 கிரேக்க வரலாற்றாசிரியர் தியுசிடைட்ஸ், சுனாமி ஏற்படுவதற்கான காரணங்களை "பிலோப்போனேசியப் போர் வரலாறு" என்ற புத்தகத்தில் கூறியுள்ளார். அவர் தான் முதன்முதலில் கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றும், எந்த இடத்தில் நிலநடுக்கம் கடலில் உண்டானதோ அங்கு கடல் உள்வாங்கும். பின்பு திடீர் பின்வாங்குதலும், மறு இரட்டை சக்தியும் கொண்ட வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. நிலநடுக்கம் ஏற்படாமல் இப்படி ஒரு விபத்து ஏற்பட வாய்ப்பே இல்லை என குறிப்பிட்டுள்ளார். கி.பி. 365 இல் அலெக்சாண் டிரியாவில் மிகப் பெரிய அழிவுக்குப் பின் ரோமன் வரலாற்றாசிரியர் அம்மி யனஸ் மாசில்லினுஸ் சுனாமி என்பது, நிலநடுக்கத்தில் தொடங்கி கடல் நீர் பின்னடைவு. அதைத் தொடர்ந்து இராட்சத அலை என்ற தொடர்ச்சியான நிகழ்வாக அமைகிறது என்றார். அதாவது, நிலநடுக்கம் என்பது நிலப்பகுதியில், கடல் பகுதியில், மலைப் பகுதியில் ஏற்படும். நிலப் பகுதியில் வந்தால் நிலத்தில் உள்ளவை அதிர்ந்து சேதமாகிறது. கடலில் வந்தால் கடலின் ஆழமான பகுதியிலுள்ள நிலத் தட்டுக்களின் அசைவு பெரிய அலைகளை உருவாக்குகின்றது. மலையில் எரிமலையாக உருவெடுக்கிறது. பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே ஒரு நிலத் தட்டுத்தான் இருந்தது. அதன் மீதுதான் பூமி இருந்தது. ஆனால் கண்டங்களாகப் பிரியப்பிரிய, அதன் தட்பவெப்ப, இயற்கை சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல்வேறு நிலத் தட்டுக்கள் உருவாகின. இந்தத் தட்டுக்களின் மீதுதான் ஒவ்வொரு கண்டமும் இருக்கின்றன. நிலம், கடல் எல்லாவற்றையும் தாங்கி நிற்பது இந்த நிலத்தட்டுக்கள் தான். இதைத்தான் 'டெக்டானிக் பிளேட்கள்' என்று புவியியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.


ஆராய்ச்சியாளர்கள் கூற்றுப்படி கி.மு. 365 ஆம் ஆண்டு ஆடி மாதம் 21 ஆம் திகதி கிழக்கு மத்தியதரைக் கடலில் தோன்றிய ஆழிப்பேரலை எகிப்தில் அலெக்சாண்டிரியாவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

சமீப நூற்றாண்டுகளைக் கணக்கில் கொண்டால் முதன்முதலில் கடந்த 1755 ஆம் ஆண்டு, கார்த்திகை மாத் முதலாம் திகதி போர்த்துக்கல் நகரான லிஸ்பனில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கம் போர்த்துக்கல், ஸ்பெயின்,மொராக்கோ நாடுகளில் சுனாமிப்பேரழிவை ஏற்படுத்தியது.


1883 ஆம் ஆண்டு ஜாவா-சுமாத்ரா இடையே கிரகோடா என்ற பகுதி எரிமலைப் பகுதியாகத் திகழ்ந்தது. அங்கு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் அணுகுண்டைவிட 10 ஆயிரம் மடங்கு சக்திவாய்ந்த வெடிச் சம்பவம் நடந்தது. பல்லாயிரம் கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்போது சத்தம் கேட்டதாகத் தகவல் கூறுகிறது. இதனால் 35 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர்.

அதன் பின்னர் தொடர்ந்து 1999 ஆம் ஆண்டு கூடச் சுனாமித் தாக்குதல் நடந்துள்ளது. ஆனால், கடந்த 1964 ஆம் ஆண்டுதான் கடைசியாக அலாஸ்கா வளைகுடாவில் மிகப் பயங்கர சுனாமி ஏற்பட்டது. அதன் விளைவாக அலாஸ்கா, வான்கூவர் தீவு (பிரித்தானியக் கொலம்பியா), அமெரிக்காவில் கலிபோர்னியா, ஹவாய் பகுதிகளைத் தாக்கியது. ஆனால், உயிர்ச் சேதம் 120 பேர் மட்டும்தான். காரணம், பாதுகாப்பு முன் ஏற்பாடுகள்தான்.

சுனாமியால் அதிகம் பாதிக்கப்பட்டது ஜப்பான் நாடுதான். 2004 இல் இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் மிக மோசமான ஆழிப்பேரலை காரணமாக 2,30,000 மக்கள் உயிரிழந்தனர். சுமாத்ரா பகுதியில் அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்படுவதால் அங்கு சுனாமிக்கான வாய்ப்புகள் அதிகம். 2004 ஆம் ஆண்டில், மார்கழிமாதம் 26 ஆம் திகதியன்று, யுரேயன் நிலத்தட்டின் ஒருபகுதியாகக் கருதப்படும் பர்மா நிலத்தட்டும், இந்தோ-ஆஸ்திரேலியன் நிலத்தட்டின் ஒருபகுதியாகிய இந்திய நிலத்தட்டும், இந்தோனேசியாவின் வடக்கே சுமாத்திரா தீவில், கடலுக்கடியில் மோதியது. அதனால் ஏற்பட்ட பூகம்பத்தால் தோன்றிய அலைகள் தான் இந்தியப் பெருங்கடலில் சுனாமியை ஏற்படுத்தியது. இதுவே 2004 ஆம் ஆண்டின் மிகப்பெரிய இயற்கை அழிவாகக் கருதப்பட்டது. இது 2004 ஆம் ஆண்டு - இந்தியப் பெருங்கடலின் பூகம்பமும் ஆழிப்பேரலையும் எனப்படுகின்றது.







நிலத்தை அடையும்போது அலைகள் மேலும் வேகமிழந்து அதிக உயரம் எழும்புகின்றன.

சுனாமி உண்டாவதற்கு முக்கிய காரணம், கடலில் ஒரு கணிசமான அளவுநீர் இடப்பெயர்ச்சி ஆவதே ஆகும். நீர் இடப்பெயர்ச்சி ஆவதற்கு நிலநடுக்கங்கள், நிலச்சரிவுகள், எரிமலை வெடிப்புகள், பனிப்பாறைகள் உருகுதல் என்பன காரணமாகும். மிக அரிதாகச் சில நேரங்களில் விண்கற்கள் மற்றும் அணுவாயுதச் சோதனைகள் மூலமும் சுனாமி உருவாகும். இவற்றால் உண்டாகும் அலைகள் பின்பு ஈர்ப்பு சக்தியால் நீடிக்கிறது. அலைகள் சுனாமி உருவாவதில் எந்தப் பங்கும் வகுப்பதில்லை.


ஆழிப் பேரலையானது,

- கடலாழத்தில் ஏற்படும் எந்தப் பாதிப்பின் போதும் ஏற்படும்.
- கடலாழப் பூகம்பத்தினால் ஏற்படும்.
- கடலை ஒட்டிய நிலப்பகுதியில் ஏற்படும் பூகம்பத்தால் ஏற்படும்.
- மலையில் எரிமலை வெடிப்பு உண்டாவதால் ஏற்படும்.
- வானில் கிரகங்களின் செயற்பாடுகள் மாறும் போதும் ஏற்படவாய்ப்புண்டு.

(இது இன்னும் உறுதிப்படுத்தப் படவில்லை).

- கடலில் இயற்பியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும் ஏற்படும்.

கடல் படுகையில் திடீரென ஏற்படும் மாற்றதால் மேலிருக்கும் தண்ணீர் செங்குத்தாக இடமாற்றம் அடைவதால்




சுனாமி உருவாகும். டெக்டானிக் நிலநடுக்கங்கள், பூமியின் புவி ஓடு உருக்குலைவதால் உண்டாகும். இது கடலுக்கு அடியில் ஏற்படும் போது சிதைக்கப் பட்ட பகுதியிலுள்ள தண்ணீர், சமநிலையில் இருந்து இடம்பெயர்கிறது. டெக்டானிக் தட்டுகளின் தவறான சுழற்சி காரணமாக, செங்குத்தாக நீர் இடப்பெயர்ச்சி செய்யப்படுகிறது. இயக்கத்தில் ஏற்படும் சாதாரண தவறுகளாலும் கடல் படுகையில் இடப்பெயர்ச்சி ஏற்படும். ஆனாலும் இவை பெரிய சுனாமியை உண்டாக்குவது இல்லை. சுனாமிகள் ஒரு சிறிய அலைவீச்சும், மிக நீண்ட அலைநீளமும் உடையவை. சாதாரண கடல் அலை 30 அல்லது $40m$ அலை நீளம் உள்ளவை. ஆனால் சுனாமி அலைகள் சில நூறு கிலோமீற்றர் நீளம் உடையவை. இவை கடல் பரப்பைவிட 300 மில்லிமீற்றர் மேலே சிறிய வீக்கம் போன்று உருவாகும். அவை தாழ்வான பகுதியை அடையும் போது மிக அதிக உயரமாக மேலெழுகிறது. சுனாமியின் சிறிய அலைகூட கடலோரப் பகுதியை மூழ்கடித்துவிட முடியும். ஏப்ரல் 1946, அலாஸ்காவில் அலேடன் தீவுகளுக்கு அருகில் 7.8 ரிக்டர் அளவுகள் பூகம்பம் ஏற்பட்டது. இதனால் 14 மீற்றர் உயரத்திற்கு அலை மேலே எழுந்து ஹவாய் தீவில் உள்ள ஹிலோ என்ற இடத்தையே அழித்து விட்டது.

பசுபிக் பெருங்கடல் தரையில் அலாஸ்கா கீழ் நோக்கித் தள்ளப்பட்டதால், உண்டான பூகம்பமே இதற்குக் காரணம். குறுகும் எல்லைகளில் இருந்தும் ஸ்டாரிக்கா என்ற இடத்தில் 8,000 வருடங்களுக்கு முன் சுனாமி தோன்றியது. கிராண்ட் பேங்க் 1929, பப்புவா நியூகினியா 1998 (டப்பின் 2001) சுனாமிகள் ஏற்படக் காரணம் பூகம்பத்தின் மூலம் உண்டான வண்டல் கடலில் சென்று கலந்ததால் உண்டானது.

**செல்வி. யஸ்மின் சரண்யா**
**முகிழ்நிலை, ஆசிரிய மாணவி (விஞ்ஞானம்)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

## திலீபனுக்கு அஞ்...

சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் கௌதமன் தலைமையில் நேற்று இடம் பெற்றது.

இதன்போது கூட்டமைப்பின் பெண் நகர சபை உறுப்பினர் லக்சனா நாகராஜன் தியாகி திலீபனுக்கு ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்துவதற்கு சபையின் தவிசாளரிடம் அனுமதி கேட்டிருந்தார்.

எனினும் குறித்த நிகழ்வினை அனுஷ்டிப்பதற்கு நீதிமன்றம் தடைவிதித்துள்ளமையால் அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதி வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தவிசாளர் குறித்த உறுப்பினரிடம் தெரிவித்தார். (ம-3,299)

## அராலியில்...

தில் அனுமதி பெற்ற பின்னர் குறித்த குண்டு இன்றையதினம் மீட்கப்படவுள்ளது. (ம-3,104)

## பாம்புக்கடிக்கு...

கோட்டை தெற்கைச் சேர்ந்த செல்வன் ஜெசிந்தன் (வயது - 7) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுவன் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு இயற்கைக் கடன் கழிக்கச் சென்றுள்ளார். அப்போது பாம்பு கடித்துள்ளது.

உடனடியாக தாயிடம் வந்த சிறுவன் பாம்பு கடித்ததாக கூறியுள்ளார். அப்போது தாயார் பூச்சி கடித்துள்ளது என ஆசுவாசப் படுத்தியுள்ளார்.

தொடர்ந்து சிறுவனின் வளர்ப்புத் தந்தையார் காலில் விபூதி பூசி வலியை எடுப்பதாக கூறி விபூதியை தடவியுள்ளார். சிறுவன் மீண்டும் மீண்டும் அழுதபடி தன்னை பாம்பு தீண்டிவிட்டதாக கூறியுள்ளான்.

பின்னர் 8.45 மணியளவில் சிறுவனால் பேச முடியாமல் போன போது, யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

அங்கு சிகிச்சையளிக்கப்பட்டு ஒரு மணித்தியாலத்தின் பின் சிகிச்சை பலனின்றி சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இந்த மரண விசாரணைகளை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,9)

மெகா பவர்
திகதி 17/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0615
வெற்றி எழுத்து N
சுப்பர் இலக்க 17
வெற்றி இலக்கங்கள் 02 43 46 71

மஹஜன சம்பத
திகதி 2020/09/17
சீட்டிழுப்பு இலக்கம் 4248
ஆங்கில எழுத்து T
வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 3 1 5 7 8
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1614
திகதி 2020/09/17
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 29 58 62 73
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
சீட்டிழுப்பு திகதி 17-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2543
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 29 47 49 55
தேசிய லொத்தர் சபை

## கரவெட்டி பிரதேச...

இக் கூட்டத்தின்போது சபை உறுப்பினர் இளங்கோ தவிசாளரின் முறைகேடு தொடர்பாக குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதன்போது 2018ஆம் ஆண்டு பத்தாம் மாதம் மூன்றாம் திகதி யாருக்கும் தெரியாமல் பொலிஸ் நிலையத்தில் இருந்த பிரதேச சபை கட்டடத்தின் திறப்பு எடுக்கப்பட்டு நிகழ்வொன்று நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து பிரதேச சபை தவிசாளருக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே பெரும் வாக்குவாதம் இடம்பெற்றது.

இதில் ஆளும் கட்சி உறுப்பினரான வியாகேசு மற்றும் பரஞ்சோதி ஆகியோர் தவிசாளருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

விடுமுறை நாளன்று பொலிஸ் நிலையத்தில் இருந்த திறப்பு யாருக்கும் தெரியாமல் எடுக்கப்பட்டு கூட்டம் நடத்தப்பட்டது.

இது எந்த துணிவில் நடத்தப்பட்டது எனவும் அவர்கள் கேள்வி எழுப்பினர் இதனால் சபையில் அமளி துமளி ஏற்பட்டது. (ம-3,60)

## நல்லூர் பிரதேச...

வருவதாவது,

யாழ்ப்பாணம் நல்லூர் அரசடியைச் சேர்ந்த மாநகர சபை சாரதி ஒருவர், திருநெல்வேலி சந்தை தொகுதியில் உள்ள கடை தொடர்பில் பிரதேச சபைச் செயலாளரால் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதாகத் தெரிவித்து பிரதேச சபைக்குள் சென்று முரண்பட்டுள்ளார். குறித்த சந்தேக நபர் திடீரென பிரதேச சபைச் செயலாளரை தாக்கியுள்ளார்.

தாக்கிவிட்டுத் தப்பிச் செல்ல முற்பட்ட போதும், அவரை தடுத்து வைத்த பிரதேச சபை ஊழியர்கள் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சந்தேகநபரின் தாக்குதலுக்கு உள்ளான நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடமை நேரத்தில் அரச ஊழியரை அலுவலகத்தில் உட்புகுந்து தாக்கிய சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்தனர்.

தாக்குதல் நடத்திய யாழ்ப்பாணம் மாநகர சபை சாரதியை பிணையில் விடுவிக்க கோப்பாய் பொலிஸார் ஆட்சேபனை தெரிவிக்காததால் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ம-3,8)

## யாழ்.பல்கலைக்...

டுள்ளது.

"இரண்டு சிரேஷ்ட மாணவர்களும் இரண்டு சிரேஷ்ட மாணவிகளும் இந்த மோசமான பகிடிவதையில் ஈடுபட்டுள்ளனர். வட்ஸ்அப் மற்றும் பிற சமூக ஊடகங்களின் வழியாக நிர்வாண புகைப்படங்கள், வீடியோக்கள் மற்றும் சுயஇன்பம் செய்யும் காட்சிகளை அனுப்புமாறு கட்டாயப்படுத்தி வருகின்றனர்.

அவர்களின் கட்டளைக்கு செவிசாய்க்க மறுத்தவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வரும்போது கடுமையான விளைவை சந்திக்க வேண்டியிருக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

3ஆம், 4ஆம் ஆண்டு மாணவர்களான இந்த பகிடிவதைக் குழு, கிட்டத்தட்ட 120 புதுமுக மாணவர்களை பகிடிவதைக்கு உள்ளாக்கியுள்ளனர். அவர்களின் மிரட்டலிற்கு அஞ்சிய புதுமுக மாணவர்களில் பெரும்பாலானவர்கள் இதுபோன்ற படங்களை அவர்களிற்கு அனுப்பியுள்ளனர்.

கொரோனா தொற்றையடுத்து முடக்கம் அறிவிக்கப்பட்ட பின்னர் பெரும்பாலான விரிவுரைகள் இணையவழியாக நடத்தப்பட்டன. இந்த காலகட்டத்தில் இந்தவகையான இணையவழி பகிடிவதை தொடங்கியது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் சிலருக்கு சமூக வலைத்தளங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படும் பகிடிவதை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போது, இந்த விடயம் தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரவைப் பேச்சாளரிடம் கேள்வி எழுப்பினார்.

இந்த விடயம் தொடர்பாக தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சரவைப் பேச்சாளர் பதிலளித்தார். (ம-3)

## நிறைவேற்று...

டங்களுக்கு மத்தியில் அரசியலில் முன்னேறி வந்தவர். நீண்டகால அரசியல் அனுபவத்தை கொண்டுள்ள இவர் மக்கள் தொடர்பில் தெளிவான விளக்கத்தை கொண்டு செயற்படுபவர்.

இந்நிலையில் எவ்வாறு மக்களின் விருப்பத்தை வெற்றி கொள்வது, எந்த சந்தர்ப்பத்தில் மக்கள் நாட்டின் தலைமைத்துவத்தின் மீது வெறுப்புக் கொள்வார்கள் என்ற விடயங்கள் தொடர்பில் நன்கு அறிந்து கொண்டுள்ளவர்.

அதனால், இவருக்கு இத்தகைய அதிகாரங்கள் கிடைக்கப் பெற்றால், அதில் பாரதூரமான பாதிப்புகள் ஏற்படாவிட்டாலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையில் கிடைக்கப் பெற்றால் அது எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை கூறமுடியாது என்றார். (ம-3)

## தவி...

விசாரிப்பதற்காக சென்றபோதே தாக்குதலிற்கு உள்ளானதாக தெரிய வருகிறது.

இச்சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

மேலதிக விசாரணைகளைநெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

### வரவு செலவுத் திட்டம்

# ஒக்ரோபரில் பாராளுமன்றில்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவு திட்டம் ஒக்ரோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான இந்த வரவு செலவு திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு, நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. .

நிதி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் இதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.(ம-3)

## சீருடைகள்...

யில் ஈடுபட்டு வரும் ஊழியர் களால் இவை அடையாளம் காணப்பட்டு பளைப் பொலிஸாருக்கு நேற்று முன்தினம் புதன் கிழமை தகவல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பான விசாரணைகளை பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருவதோடு அதனை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3,100)

அத கோடிபதி
ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1044
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.09.17
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 70,610,525/-
SEASON
வெற்றி இலக்கங்கள் 16 33 60 77
ஆங்கில எழுத்து Q
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 5448
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 922
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.09.17
சீட்டிழுப்பு இல. : 3374
வர்ணம் : சிவப்பு
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 41,303,651.20
வெற்றி இலக்கங்கள் 10 14 18 74
ஆங்கில எழுத்து S
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 9278
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 367
திகதி 17.09.2020
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 16 22 62
விதி எண் 1
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,813,176
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1218
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 17.09.2020
தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
W 09 14 34 67
SUPER 500 விசேட இலக்கம் 8 5 7 5
56,860,512.40
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

ராசி அதிர்ஷ்டம்
திகதி 17.09.2020
வெற்றி வாரம் 2925
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள்
09 18 35 57
தனுசு
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 3584
ரூ.100 பரிசுக்குரிய 401
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
www.dlb.lk
தொ. பே. : 0112 333 546/47
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 10,171,900
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# மரண அறிவித்தல்



## திருமதி இராஜேஸ்வரி பாலசிங்கம்

வண்ணார்பண்ணை, ஐயனார் கோவிலடி, உடையார் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி பாலசிங்கம் நேற்று (17.09.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - இராசாம்பாள் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவபாலன், ஆனந்தமனோகரி மற்றும் சிவனேஸ்வரி, யோகேஸ்வரி, கமலாதேவி, சாரதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரபாகரன், ராதிகா, சுகிர்தா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகேஸ்வரன், ஞானரஞ்சன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் துஷிந்தா, சர்மிந்தா, கிருஷாணிக்கா, சலேமிஆராதனா, சாமுவேல் சகாயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் சாகித்தியா, கவிஷன், டுஷான் ஆகியோரின் அன்புப் பூட்டியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (18.09.2020) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் ஆங்கிலிக்கன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (4008)

இல. 29/9, உடையார் லேன்,
ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்
Tel : 021 222 6252

# மரண அறிவித்தல்

பிறப்பு 07 – 03 – 1945



இறப்பு 17 – 09 – 2020

## நடராசா ஜெயராசா

(மாநகரசபை ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்)

சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ஜெயராசா நேற்று (17.09.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - நல்லம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற நடராசா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் மகாலட்சுமியின் (கனடா) அன்புக் கணவரும் சுதாகர் (கனடா), கஜேந்தினி (மீரா-சில்லாலை), கஜேந்திரன் (கனடா), சுதர்சன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனேஸ்வரி, சுதேந்திரராஜ் (இந்திரன்), துஷியந்தினி, சக்திகா (கனடா) ஆகியோரின் மாமனாரும் தூயவன், இசைப்பிரியன் மதுமிலா, சதுர்ஷன், அனுக்ஷா, அக்ஷியன், இனியவன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற ஜெயரட்ணம், ஜெகதீஸ்வரி, இராஜேஸ்வரி, ஜெயராணி, காலஞ்சென்ற ஜெயரூபி, ஜெயகௌரி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற மனோரஞ்சிதம், கோபாலகிருஸ்ணராஜா, சரோசாதேவி, லோகேஸ்வரி மற்றும் ஜெயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துரை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (4003)

சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு.

மகள் : 077 663 0253

தகவல்:-
குடும்பத்தினர்





வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

திறந்த பல்கலைக்கழக சட்டமாணி (LLB)
நுழைவுப் போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள் ஆரம்பம் 20.09.2020 ஞாயிறு, காலை 8.30 மணி.
பிரபல விரிவுரையாளர்கள்
AMC ACADAMY
BMC LANE, JAFFNA.
077 694 4543, 070 171 0061
ஏனைய போட்டிப் பரீட்சை வகுப்புக்களும் நடைபெறுகின்றன. (4006)

அமெரிக்க லொத்தர் விசா 2020
நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் வீசா அதிஸ்டசாலி ஆகலாம்.
இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட
உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்
என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS
0768226244 (C-112)

AIRR LINE
வெளிநாடுகளுக்கான தபால் பொதிகள் சேவை
கனடா - 650/=
கே.கே.எஸ். வீதி,
உப்புமடம்.
Tel : 076 443 1575

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
பிரான்ஸ் / ஜெர்மனி
நெதர்லாந்து / சுவிஸ்
1150 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-112)

வேலை ஆட்கள் தேவை
நீண்டகாலமாக யாழ். நகரில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு சமையல் மற்றும் சுத்திகரிப்பு வேலை ஆட்கள் தேவை. (C-344)
தொடர்பு : 077 119 0011

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
A/L 2020 அனைத்துப் பிரிவு மாணவர்களுக்குமான...
மாபெரும் விசேட செயலமர்வு
8.30AM - 2.30PM (C-338)
செப்ரம்பர் 19,20,21
ICT கணிதம்(7)
விவசாய விஞ்ஞானம் ஊடகக்கல்வி புவியியல்
☆ இம்முறை COVID - 19 தாக்கத்தால் இழந்த கல்வியை ஈடுசெய்யும் வகையில்
☆ அனைத்துப் பாடங்களுக்கும் இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
☆ பாடப்பரப்புக்கள் அனைத்தும் துரித மீட்டல் செய்யப்படும்.
☆ தனிப்பாட அனுமதிகளும் வழங்கப்படும்.
☆ சிரமமின்றி கையேடுகளைப் பெற்றுக்கொள்ள முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.
முற்பதிவுகளுக்கு:- 077 248 7774 / 021 221 7860

A/L - 2020
மாணவர்களுக்கான உயர் பெறுபேறு நோக்கிய......
" புவியியல் கருத்தரங்கு "
ஆசிரியர் N. BABU
(B.A Geo. Spl.)
காலம் – ஒக்ரோபர், 01,02,03,04 திகதிகளில்
ஆரம்பம் – 01.10.2020 வியாழன்
நேரம் – 2.00 p.m
அனைத்து புவியியல் பாட மாணவர்களும் பங்குபற்றலாம். (C-340)
இடம் -
DMI ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
Tel : 077 936 5087


# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் முகாமையாளர்
க. சுரேந்திரராஜ் (இந்திரன்) அவர்களின் மாமனார்

அமரர்

## நடராசா ஜெயராசா

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2020) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் சில்லாலை மேற்கு பண்டத்தரிப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். (4003)

கந்தசாமி அன் சன்ஸ் உரிமையாளரும் சக ஊழியர்களும்
பிரதான வீதி, சங்கானை. - 077 339 3372

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.